உ
கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩௪] ஈசுவர௵ ஆவணிமீ [பகுதி-௧0.

Vol. 34. August—September 1937. No. 10.

## பாஞ்சராத்திரம்.

[உ௬0-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

துர்யோதனன்:—மாமா! பலவானுன எதிரியுடன் கூடிய தாயும் குடியிருக்கமுடியாததாயுமுள்ள ஏதேனும் ஒருநாட்டைத் தாங்கள் ஆலோசித்துத் தெரிவியுங்கள்; அங்கே பாண்டவர்கள் வசிக்கட்டும்.

சகுனி:—ஓ! கஷ்டம்.

ஶக்ரந்ருபதிதநயஸ்யாஸ்தி க: பார்த்தாத் பலவத்தர: ।
ஊஷரேஷ்வபி ஸஸ்யம் ஸ்யாத் யத்ர ராஜா யுதிஷ்டிர: ॥

நீ குறித்தபடி ஓர் இழிந்தநாட்டைப்பற்றி யோசித்துச் சொல்வேன்; ஆனல் அர்ஜுனனைக்காட்டிலும் எவன் அதிகபலமுள்ளவன்? யுதிஷ்டிரன் எந்தத்தேயத்தில் அரசாளுகிறானே, அது, [ஒன்றும் விளையாத] களர்நிலமாக இருக்குமானாலும், அதில் எல்லாப்பயிர்களும் விளைவுக்குவருமே!

துர்யோதனன்:— அப்படியானல், இப்போது-

ப்ராகாரதலமேய்ய தாயஶோவஜிதம் ச
ஶ்ருதிஹ காஞ்சய்யதைவஶ்ச ப்ராணம் வ்யயிஷ்யாமி ।
தநுஜேநபொவா வம்சநாவா யயாவா
ஹவதா ந்ருப! ஜலம் தஸ்ய ஸத்ருஷ்டாதி கதம் ஸ்யாம் ॥

*

அவசியம் தானஞ்செய்வேனென்று என்னுடைய ஆசார்யரின் கைத்தாமரையில், (என் குலப்பெரியோர்கள் செய்துவந்தவண்ணமும் அவர்களால் சொல்லப்பட்டு நான் கேட்டவாறும்) புனல் வார்த்துவிட்டேன். அவ்விதம் செய்த உறுதியானது நியாயமாயில்லாவிட்டாலும், வஞ்சனையாயிருந்தாலும், அல்லது அது எவ்விதமிருப்பினும், ஓ! அரசரே! அந்தத்தீர்த்தத்தை உண்மையாகச்செய்யவிரும்புகிறேன்; ஒருகாலும் நான் பிறழமாட்டேன்.

சகுனி:—பொய்வார்த்தையிலிருந்து உன்னை விடுவிக்கவேண்டுமல்லவா?

துர்யோதனன்:—ஆம்.

சகுனி:—ஆகலால் இங்கேவா. [ஆசாரியரின் சமீபம்வந்து] ஓ! ஆசார்யரே! மேன்மைபொருந்திய குருகுலமன்னன் தங்களிடம் தெரிவித்துக்கொள்கிறான்.

துரோணர்:—குழந்தாய்! காந்தார அரசனே! சொல்வாயாக.

சகுனி:—ஐந்து நாட்களுக்குள் பாண்டவர்களின் நிலைமையைத் தெரிந்துகொள்ளக்கூடுமானால், ராஜ்யத்திற் பாதியை அவன் அவசியம் கொடுப்பான். தாங்கள் தெரிந்துசொல்லுவீர்களாக.

துரோணர்:—யைஃ க்ருதஞ்காஜெஷ்ஷு நம் ஹவஹ்ஃ
ஸம்வஷஸரொ ச்ஊாடிஸஹி நஹ் த்ருஷ்டாஃ।
தெ வம்ஸாத்ரூண ஜெயாவநெயா
வாஸம் ஹ்ருத்தம் விஸஜாக்ஷரெண ॥

மோசஞ்செய்ய விருப்பங்கொண்டவர்களான உங்களால், பன்னிரண்டுவருஷகாலமாக எவர்களைக் காணமுடியவில்லையோ, அவர்களுடையநிலைமையை, ஐந்துநாட்களில் நான் அறிந்து சொல்லமுடியுமா? எனக்கு வரம் கொடுக்கப்படவில்லையென்றுதான் அதற்கு அர்த்தமாகுமன்றோ?

பீஷ்மர்:—பேரனே! துர்யோதன! தர்மமென்பது கபடமற்றது; இவ்விஷயத்தில் நாமும் உவப்படைந்தோம். பேரனே! பார்ப்பாயாக.

𑌵𑌰𑍍𑌷𑍇𑌣 𑌵𑌾 𑌵𑌰𑍍𑌷𑌶𑌤𑍇𑌨 𑌤𑍇𑌷𑌾𑌂।
𑌤𑍍𑌵𑌂 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌨𑌾𑌂 𑌕𑍁𑌰𑍁 𑌸𑌂𑌵𑌿𑌭𑌾𑌗𑌮𑍍।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌂 𑌕𑍁𑌰𑍁 𑌵𑍀𑌰 𑌸𑌤𑍍𑌯𑌾𑌂
𑌸𑌤𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾 𑌹𑌿 𑌸𑌦𑌾 𑌕𑍁𑌰𑍂𑌣𑌾𑌮𑍍॥

அவர்களுடைய அஜ்ஞாதவாசம் கழிந்தபிறகு, ஒருவருஷம் சென்றாவது, அல்லது நூறு ஆண்டுகள் கழித்தாவது, உன்னுடைய பிரதிஜ்ஞை (–கடைப்பிடி)யை உண்மையாகச்செய்வாயாக; குருகுலத்திற்பிறந்தவர்களின் பிரதிஜ்ஞை எப்பொழுதும் பொய்யாகாதன்றோ?

துர்யோதனன்:—எனதுநிச்சயமும் இதுவேதான்.

துரோணர்:—(மனதுக்குள்)

𑌕𑌾𑌰𑍍𑌯𑍋𑌤𑍍𑌕𑌰𑍍𑌷𑍇𑌣 𑌮𑍇 𑌹𑍍𑌯𑍇𑌷 𑌹𑌨𑍂𑌮𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌗𑌤𑌾 𑌸𑍍𑌪𑍃𑌹𑌾।
𑌲𑌂𑌘𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌣𑌵𑌂 𑌯𑍇𑌨 𑌨𑌷𑍍𑌟𑌾 𑌸𑍀𑌤𑌾 𑌨𑌿𑌵𑍇𑌦𑌿𑌤𑌾॥

காரியத்தை நிறைவேற்றவேண்டுமென்ற பரபரப்பால் என்னுடையவிருப்பமானது, காணமற்போன சீதையைக் கடலைக் கடந்து, 'கண்டேன் நான்' என்று சொன்னவனான ஹநுமானுடைய வேகத்தை அடைந்திருக்கிறது.

ஆதலால் எவ்விடமிருந்து பாண்டவர்களின்நிலைமையைத் தெரிந்துகொள்வேன்?

தூதன்:—[புகுந்து] மகாராஜா வெற்றிபெறுக.

எல்லோரும்:—விராடஅரசர் வந்துவிட்டாரா?

தூதன்:—விசனத்தில் மூழ்கியிருப்பதால் வரவில்லை.

எல்லோரும்:—அவருக்கு விசனம் ஏது?

தூதன்:—மகாராஜா! தயவுசெய்து கேட்கவேண்டும். அவருக்கு நெருங்கின உறவினரான நூறுகீசகர்களும்,

𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌛𑌨𑍍𑌨𑍇𑌨 𑌕𑍇𑌨𑌾𑌪𑌿 𑌬𑌾𑌹𑍁𑌭𑍍𑌯𑌾𑌮𑍇𑌵 𑌹𑌿𑌂𑌸𑌿𑌤𑌾𑌃।
𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌹𑌿 𑌶𑌰𑍀𑌰𑌾𑌣𑌾𑌮𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌜𑌨𑌿𑌤𑍋 𑌵𑌧𑌃॥

இரவுவேளையில் மறைந்திருந்த ஒருவனல் கைகளாலேயே நாசஞ்செய்யப்பட்டார்கள்; ஏனெனில், உடல்களில் ஆயுதங்களின் சுவடு ஒன்றும் காணப்படவில்லை.

எல்லாரும்:—ஆயுதமின்றி எவ்வாறு நாசஞ்செய்யப்பட்டார்கள்?

பீஷ்மர்:—துரோணரிடம் (தனித்து) ஆசார்யரே! ஐந்துநாள் எல்லையை உடன்படுவீர்களாக.

துரோணர்:—(தனிமையில்) எதற்காக?

பீஷ்மர்:—கைவலிமைபொருந்தியவனான பீமசேனனுடைய வேலை இது.

ஹீஃ஡ெஸ நவஸ்ய ஷீ஡ெஷா ஸுவ்யக்தம் வாஹுஶாலிநঃ।
யொऽஸிநு ஜாதஶெத ரொஷঃ ஸதஸிநு ஹிதம் ஶெத॥

கைவலிமைபொருந்தியவனான பீமசேனனுடைய விளையாட்டு இது; உடன்பிறந்தவர்களான (துர்யோதனன்முதலிய) நூற்றுவர் பேரிலுமுள்ள கோபத்தைக் கீசகர்கள் நூறுபேர்களிடத்தும் செலுத்தினன்போலும்.

துரோணர்:—தாங்கள் எவ்விதம் அறிந்தீர்கள்?

பீஷ்மர்:—

கயம் வணித கல்பெஷு ஜாநா நாம் வாலவாவயுঃ।
நாஸிஜா நதி வஸுஸா நாம் ஶ்ரங்கஷா நாநி ஜொவ்ருஷாঃ॥

பண்டிதரே! நதிக்கரையில் கன்றுகள் செய்யும் சபலத்தையும், கொம்புகளால் கரையைக் குத்தி அழிப்பதையும், பசுக்களும் விருஷபங்களும் அறியாவா?

துரோணர்:—['பசுக்களும் காளைகளும்' என்று] காரியம் சித்தியானது; (துரியோதனனைநோக்கி வெளிப்படையாக) பிள்ளாய்! துரியோதன! ஐந்துநாள்தவணை இருக்கட்டும்.

துர்யோதனன்:—ஆம் ஐந்துநாள்தவணையே.

துரோணர்:—ஓ! ஓ! வேள்வியைக் கண்டு களிப்பதாக வந்திருக்கிற அரசர்களே! இங்கே மேன்மைதங்கிய குருகுலமன்னனாகிற துர்யோதனன், இல்லை இல்லை இல்லை; மாமனுடன்கூடினவனாயிருந்து, பாண்டவர்களின்நிலைமையை ஐந்துநாளைக்குள் தெரிவித்தால் ராஜ்யத்தின்பகுதியை (அவர்களுக்கு) அவசியம் கொடுப்பதாகவாக்களித்திருக்கிறானல்லவா? [துரியோதனனை நோக்கி] சரிதானா? பிள்ளாய்!

துர்யோதனன்:—ஆம்.

துரோணர்:—இதைப்பற்றி யோசித்து இரண்டுமூன்றுதடவை உறுதிசொல்லவேண்டும்.

சகுனி:—ஐந்துநாள்தவணைமுடிவில் பார்ப்பேன்.

துரோணர்:—கங்கையின்புதல்வரே! அப்படியன்றோ.

பீஷ்மர்:—(தனக்குள்)

ஸ்வாயத்தஸ்ய யதா ஹர்ஷிதோ ஹ்யாசார்ய ஸம்ஹ்ருதிதஃ।
ஸங்கே தூர்யோதனேனைஷ வஞ்சிதோ நந வஞ்சிதஃ॥

தைரியத்தைவிட்டு ஆசாரியர் எப்போது சந்தோஷத்தை வெளியிட்டாரோ, அப்பொழுது வஞ்சிக்கப்படுகிறவனுன துரியோதனனுலே, அவரே ஏமாற்றப்பட்டார் என்று நான் நினைக்கிறேன். [பாண்டவர்கள் இதுவரை விராடநகரில் இருக்கிறார்கள் என்பது நிச்சயமில்லையாகையால் ஆசாரியரே ஏமாந்துவிட்டார் போலும்.]

பேரப்பிள்ளாய்! துரியோதன! விராடனிடம் எனக்கு இரகசியமாக விரோதம் உண்டு. மேலும் உனது வேள்வியிற் கலந்துகொள்ளவும் அவன் வரவில்லை; ஆதலால் அவனுடைய பசுக்களைப் பிடிக்கவேண்டும்.

துரோணர்:—(தனிமையில்) ஓ! கங்கையின்புதல்வரே! விராடமஹாராஜன் தங்களுக்குப் பிரியமான மாணவனல்லனோ? அவனுடைய பசுக்களைப் பிடிப்பது எதற்காக?

பீஷ்மர்:—(தனிமையில்) நேர்வழியிலேயே புத்தியைச் செலுத்துகிற (கபடமற்ற) பிராமணரே!

யஷ்டிதா ஸமஶம்ஸேந ரோஷமேஷ்யந்தி பாண்டவாஃ।
ஸ்ம்ருதி தேஷாம் க்ருதஜ்ஞத்வம் கோக்ரஹணே ஸூசிதம்॥

தேரொலி காதில் விழும்போது, பாண்டவர்கள் சினங்கொள்வார்கள்;(விராடனுடைய)பசுக்கள் பிடிக்கப்படும்போது அவனிடத்தில் தங்களுக்குள்ள நன்றியறிதலை வெளிப்படுத்த அவர்களுக்கு ஒரு அவகாசமும் ஏற்படும்.

வேலையாள்:—(அரங்கத்திற் புகுந்து) மகாராஜா வெற்றிபெறுக. (யாகம்முடிந்து) ராஜதானியில் பிரவேசிப்பதற்குத் தங்களுடைய தேர்கள் ஆயத்தமாயிருக்கின்றன.

துர்யோதனன்:—

ஏபிரேவ ரதைஃ சீக்ரம் க்ரியதாம் தஸ்ய கோக்ரஹஃ।
மமாயம் யஜ்ஞாவப்ருதஸ்நாதஸ்சாபோ ஹஸ்தம் கரிஷ்யதி॥

இந்தத்தேர்களைக்கொண்டே அவனுடைய பசுக்களைப் பிடிப்போம்; வேள்விக்காக அமைதியுடனிருந்த இந்த என் கதையும் மறுபடியும் என் கையில் இருக்கட்டும்.

துரோணர்:—*தஸ்மாந்மே ரதமாநயந்து புருஷாஃ—ஆதலால் வேலையாட்கள் என் தேரைக் கொணரட்டும்.

சகுனி:—*ஹஸ்தீ மே நீயதாம்—என்யானையைக்கொணர்க.

கர்ணன்:—*ஸாங்க்ராமிகம் ஸ்யந்தநமேது ஸத்யோ யுக்தோத்தமாஸ்வஃ ஸ்தாப்யதாம்।—போருக்கென்றே சிறந்தவையான குதிரைகள்பூட்டியதேரொன்று இங்கு நிறுத்தப்படட்டும்.

பீஷ்மர்:—*வாஞ்சா மே த்வரதே விராடநகரம் கந்தும் தநுர்நீயதாம்—விராடநகரம் போக எனக்கு அதிக விருப்பமிருக்கிறது; என்வில் இங்கே விரைவில் கொணரப்படட்டும்.

எல்லோரும்:—[பீஷ்மரைநோக்கி]

*ஸ்தீயதாம் த்வத்ரைவ நிக்ஷிப்ய ஸர்வே நாஜ்ஞாவிதேயா வயம்॥

வில்லை இங்கேயே வைத்துத் தாங்களும் இங்கேயே இருப்பீர்களாக: நாங்கள் தங்கள் ஆணைப்படிசெய்யச்சித்தமாயிருக்கிறோமே.

துரோணர்:—குழந்தாய்! காந்தாரவரச! பசுக்களைப்பிடிப்பதில் உன் தேர்தான் முன்செல்லவேண்டும்.

சகுனி:—நல்லது அவ்விதமே செய்வேன்.

[எல்லாரும் செல்லுதல்.]

முதலங்கம் முற்றிற்று.

---

*தஸ்மாந்மே ரதமாநயந்து புருஷாஃ ஹஸ்தீ மே நீயதாம் ஸாங்க்ராமிகம்ஸ்யந்தநமேது ஸத்யோ யுக்தோத்தமாஸ்வஃ ஸ்தாப்யதாம்। வாஞ்சா மே த்வரதே விராடநகரம் கந்தும் தநுர்நீயதாம் ஸ்தீயதாம் த்வத்ரைவ நிக்ஷிப்ய ஸர்வே நாஜ்ஞாவிதேயா வயம்॥

## இரண்டாவது அங்கம்.

[வயதுமுதிர்ந்த இடையன் ஒருவன் அரங்கத்திற் புகுதல்.]

இடைப்பெரியோன்:—என்னுடைய பசுக்கள் கன்றுகளுடன் கூடினவைகளாக இருக்கட்டும்; இடைச்சிகள் சுமங்கிலிகளாக வாழ்க; எங்களுடைய அரசரான விராடரும் பூமி முழுவதையும் ஆள்பவராக இருப்பாராக; மகாராஜாவின் பிறந்தநாளன்று தானஞ்செய்வதற்காகப் பசுக்கள் வீதிகளிற் கொணரப்பட்டிருக்கின்றன; இடைச்சிறுரும் சிறுமியரும், அலங்கரித்துக்கொண்டு களிப்புடனிருக்கிறார்கள்; அவர்களுக்குள் நான் தலைமைவகித்துக் காரியங்களை நடத்துகிறேன்; இந்தக் காக்கை, பட்டமரத்தில் ஏறிக்கொண்டு, காய்ந்த கிளையில் மூக்கைத் தேய்த்துக்கொண்டு கதிரோனைப்பார்த்துக் கரைகிறதே! நமக்கும் நம்முடைய பசுக்களுக்கும் நலம் ஆகுக. அடே! கோமித்திர! விராட மகாராஜாவின் பிறந்தநாளன்று தானஞ்செய்வதற்காக ராஜவீதிகளில் பசுக்களைக் கொணர்ந்திருக்கிறோம்; இடைச்சிறுவரும் சிறுமியரும் ஆடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு சந்தோஷமடைகிறார்கள்; அடே! கோமித்திர! சிறுவர் சிறுமிகளை, இங்கே அழைப்பாயாக.

கோமித்திரன்:—மாமா! உத்திரவுப்படி. கோரக்ஷணிகே! கிருதபிண்ட! ஸ்வாமிநி! விருஷபதத்த! மஹிஷதத்த! எல்லோரும் சீக்கிரம் வாருங்கள்; மாமா கட்டளையிடுகிறார்.

[எல்லோரும் வருதல்]

எல்லோரும்:—கும்பிடுகிறோம்.

இடைப்பெரியோன்:—நமக்கும் பசுக்களுக்கும் சிறுவர் சிறுமியர்க்கும் நன்மையுண்டாகட்டும். விராடமகாராஜாவின் பிறந்த நாள்விழாவுக்காகப் பசுக்கள் இங்கே கொண்டுவரப்படும் வேளை வரையில் நாம் பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் இருப்போம்.

எல்லோரும்:—மாமாவின் உத்திரவுப்படி.

[எல்லோரும் நர்த்தனஞ்செய்தல்]

இடைப்பெரியோன்:—ஆட்டம் நன்றாயிருக்கிறது. பாட்டும் அப்படியே! நானும் ஆடுகிறேன். [நர்த்தனம் செய்தல்]

எல்லோரும்:—அதோ! அங்கே அதிகமான தூசி கிளம்புகிறதே!

இடைப்பெரியோன்:—தூசிமட்டுமன்று. பல்லியமுழக்கமும் கேட்கப்படுகிறதே.

எல்லோரும்:—பகல்வேளைச்சந்திரன்போல, வெண்ணிறமான தூளியால் மறைபட்டுச் சூரியன் இருந்தும் இல்லாதவன்போலிருக்கிறான்.

கோமித்திரன்:—மாமா! ஹா! ஹா! யாரோ கள்வர்கள், தயிர்க்கட்டிகள்போல் வெண்மைநிறமுள்ள குடைகளுடன், குதிரைகள்பூட்டிய வண்டிகளில் ஏறிக்கொண்டு, இடைச்சேரி முழுவதையும் தாக்குகிறார்களே!

இடைப்பெரியோன்:—ஓ! ஓ! பாணங்களும் விழுகின்றனவே. சிறுவர் சிறுமியர்காள்! சீக்கிரமாக வீடுகளில் நுழைந்துவிடுங்கள்.

எல்லோரும்:—மாமா! உத்திரவுப்படி.

இடைப்பெரியோன்:—நில்லுங்கள், நில்லுங்கள்; அடியுங்கள், அடியுங்கள்; பிடியுங்கள் பிடியுங்கள்; இந்தச்செய்தியை விராடமகாராஜாவிடம் தெரிவிப்போம்.

[வெளிச்சேறல்]

வேலையாள்:—[அரங்கத்திற் புகுந்து] ஓ! ஓ! திருட்டுத்தனமாய் மறைந்துகொண்டு சாமர்த்தியத்தைக் காட்டுபவர்களான திருதராஷ்டிரகுமாரர்களால் பசுக்கள் பிடிக்கப்படுகின்றன. மகாராஜாவிடம் தெரிவிக்கவேண்டும்.

இதஸ்ததோ வத்ஸைர்வ்யதிதைஸ் ததாகதை:
நிரீக்ஷ்ய த்ருஷ்டோ வ்ருஷபைஸ் ததா பயாத்।
க்ருதார்த்தநாதாகுலிதம் ஸமந்ததோ
கவாம் குலம் கோவ்ருஷஹாஹாகுலம்॥ இதி

அங்குமிங்கும் ஓடுகிறவையான கன்றுகளுடனும், வருத்தமடைகிறவைகளான பசுக்கூட்டங்களுடனும், பார்த்துப் பார்த்துப் பயம் அடைந்தவையான எருதுகளுடனும், கதறிக்கொண்டிருக்கிறதான பசுமந்தையானது, மிக்க துன்பத்தை அடைகிறது.

(திரைக்குள்) திருதராஷ்டிரகுமாரர்களாலா?

வேலையாள்:—ஐயா! ஆம்.

கஞ்சுகி:—[அரங்கத்திற் புகுந்து] தாயத்தாரிடமும் துரோகம் செய்கிறவர்களான அவர்களுக்கு இது தகுந்ததுதான். அவர்களோவெனில்,

ஸஜ்ஜெஸ்ராவெவெஷ்ஷ ஹாயாஂஹூஷிதூா
வஃஷுஹைாஃ கஷிதஸ்ரூநஹுஹாஃ ।
வீயெஷா ஸ்திஜாயாஜஸஜாஃ கூதாஷூா
ஶாஜெதூா வொஶஂ ஹொஷ நியஷாதயதி ॥

விற்களில் நாணேற்றியும், கைகளிலும் கைவிரல்களிலும் உறையேறிட்டுக்கொண்டும், கவசமணிந்து தேர்களில் ஏறிக்கொண்டும், ஆயுதங்களைக் கைகளில் எடுத்துக்கொண்டும், மிகவும் தைர்யத்துடன் போர்புரிய ஆயத்தமாயிருக்கிறார்கள்; அரசரிடம் இருக்கிற பகைமையைப் பசுக்களிடம் காட்டுகிறார்கள்.

ஜயஸேந! பிறந்தநாட்கொண்டாட்டமுயற்சியிலீடுபட்டிருக்கிற மஹாராஜரிடத்தில் அகாலத்தில் தெரிவித்தல் அவருடைய கோபத்துக்குக் காரணமாகும். ஆதலால் மங்களகாரியம் முடிந்த பிறகு அறிவிப்பேன்.

வேலையாள்:—இந்தக் காரியம் தாமதித்துச் செய்யக்கூடியதன்று; விரைவில் தெரிவிப்பீராக.

கஞ்சுகி:—இப்பொழுதே அறிவிக்கிறேன். (செல்லுதல்)

[அரசன் (விராடன்) அரங்கமேடை ஏறுதல்]

அரசன்:—ஶாதாவகூ வ்யயிதவிகீணஷவாஷவஸ்தா
ஹாவொஶ ஶயஶவஸஂகயா ஹ்ரியதெ ।
வீநாஂஸஶ்ஷுவஷுயஃ ஸவநூநாஜெஷா
நிஷஷஜொ ஶஶ வ கஶஃ கஶாணி ஹஂதெ ॥

சிதறி ஓடுகிற இளங்கன்றுகளுடன் பசுக்கள் பிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுதிலும், பருத்த தோளுடனும் குலுங்குகிற வளையல்களுடனும், சந்தனப்பூச்சுடனும் வெட்கமின்றி என்னுடைய கையானது கப்பங்களை வாங்கிக்கொண்டிருக்கிறதே! ஜயசேந! ஜயசேந!

வேலையாள்:—[அரங்கம் புக்கு] மகாராஜா! வெற்றிபெறுக! வெற்றிபெறுக!

அரசன்.—என்னை மகாராஜா என்று அழைத்ததுபோதும். என்னிடம் அரசியல் நழுவிவிட்டது. போரைப்பற்றி விரிவாய் உரைப்பாயாக.

வேலையாள்:—பிரியமற்றசெய்திகளை விரிக்கக்கூடாது. இது தான் சுருக்கம்.

> ஸகலவர்ணேஷு ரதேஷு ரவாம் ஸ்ருஜ நரேணநா।
> க்ஷாவாதேஷு ஊர்ஸ்வேஷு நாநாவர்ணவிஹக்துய:॥

பல பல நிறங்களுள்ள பசுக்கள் தேர்களாலெழுந்த புழுதியால் ஒரேநிறத்தை அடைந்து, சாட்டைகளின் அடித்தடங்களில்மட்டும் அநேகநிறங்களுடையனவாகக் காணப்படுகின்றன.

அரசன்:—ஆதலால்,

> யந்ரூவநய ஶீஷ்ம் கஶுதாம் ஸ்ருஜ நேர
> ஜஜ்ஹதிஜவயாதர் ஹஜதோ யஸ்ய ஹக்தி:।
> ரண்ஶிரஸி ரவாயெ நாஷிஜோவ: ஶ்ரயந்தா
> நியநஜேவி யஶ: ஸ்ராநாக்ஷயிதாதயஜெ:॥

என் வில்லைக் கொண்டுவா; தேரைச் சித்தஞ்செய்; எவனுக்கு என்னிடம் உண்மையான அன்பு இருக்கிறதோ, அவன் என்னைத் தொடர்ந்துவரட்டும்; பசுக்களை மீட்கமுயலுதல் வீணாகாது; மீட்டால் புகழுண்டு; போரில் உயிர்துறந்தால், புண்ணியமுண்டு.

வேலையாள்:—மஹாராஜாவின் உத்திரவுப்படி. [செல்லுதல்]

அரசன்:— துர்யோதனனுக்கு நம்மிடம் பகைமை ஏது? ஓ! வேள்விக்கு வரவில்லை என்பதோ? கீசகர்களின் நாசத்தால், நாம் துயரமடைந்திருந்தோமே? எவ்விதம் வேள்விக்குப் போயிருக்க முடியும்? ஒருக்கால் பாண்டவர்களிடம் மறைவாக நட்புவைத்திருக்கிறோம் என்றோ? எவ்விதத்திலும் போர்நடத்தியேதீரவேண்டும்; நீ ஹஸ்தினபுரத்தில் வசித்திருந்தவனாதலால், உனக்குத் துரியோதனனியல்பு தெரிந்திருக்குமே.

காமம் தா⁼யொ லய நமெஸ்யஷ நஷொஷமீஹியாஸ்யதி।
ஸம்ஸக்த்வா தவஸி ஶ்ராஜ: வ்யூஹதெ த்ருவஹி காயல்வாநு ॥

துரியோதனனுடையகுறைகளைத் தன்காரியத்தில் கருத்துள்ளவனான இவன் வெளியிடமாட்டானே. ஆக்கிரத்துடன் அடிக்கடிவினவினாலும், உண்மையையுரையான். யாரடா! இங்கே!

வேலையாள்:—[புகுந்து] மகாராஜா! வாழ்க!

அரசன்:—பகவானை அழைத்துவருவாயாக.

வேலையாள்:—மகாராஜாவின் ஆஜ்ஞைப்படி; (செல்லுதல்)

பகவான்:—[அரங்கம் நுழைந்து நாற்புறங்களிலும் பார்த்து]

மஜெஜந்ரா: கவ்ருஜெ தாமவதயொ வமீஸ்ரஹிதா
ரயா: ஸா நகுஷல்ரா: க்ருதவஸிகரா யொயவாராஷா:।
ஸமீஷெஜ்ராமம் த்ருஷ்ட்வா ஹயமீநநாஹகுதம் வ்யூஶதி மேம்
நவஜாதநஸ்தம் க்ருதமீதிரஹம்தெதா வவஜா:॥

ஓ! இது என்ன? சிறந்த யானைகள் ஆயத்தஞ்செய்யப்படுகின்றன; புரவிகள் கவசங்களணியப்பெறுகின்றன; தேர்களில் அவசியமான பொருள்களெல்லாம் சரியாக வைக்கப்படுகின்றன; போர்செய்யும் காலாட்கள் ஆயுதங்களை எடுத்துக்கொள்கிறார்கள்; இவ்விதமான முயற்சிகளைக் கண்டு, என்னால் முன்பு உணரப்படாத அச்சம் இப்பொழுது உண்டாகிறது; என்மட்டில் பயமில்லை; நான் தைரியமுள்ளவன்; என் தம்பிகள் அடக்கமில்லாத சபலர்களே, நான் என்ன செய்வேன்? [அரசனையடுத்து] தாங்கள் வெற்றிபெறவேண்டும்.

அரசன்:—பகவானே! விராடனான யான் வணங்குகிறேன்.

பகவான்:—மங்களம் உண்டாகுக.

அரசன்:—அருள்புரியப்பெற்றேன்; இதோ ஆசனம். வீற்றிருக்கவேண்டும்.

பகவான்:—நல்லது; [ஆசனத்தில் அமர்ந்து] ஓ! அரசனே!

உத்யொகஃ ப்ரஸ்தூதஃ கஸ்யாக ஶ்ரீ நல் ஸந்தொஷஜ்ஞதி।
வீபயிஷ்யதி ஸொதெஸ்காநு வீபிதாநு ரொக்ஷயிஷ்யதி॥

இவ்வளவு முயற்சிக்கும் என்ன காரணம்? உமது அரசியற் றிருவானது நிறைவடையாமல் புதிதுபுதிதாய் நாடுகளைக் கவர விரும்புகிறதா? அல்லது உம்மைச் சார்ந்தவர்கள் யாராவது எதிரிகளால் பிடிபட்டு, விடுவிக்கவேண்டியநிலைமையில் இருக்கிறார்களா?

அரசன்:—பகவானே! பசுக்கள் கவரப்பட்டதால் அவமானம் அடைந்தேன்.

பகவான்:—யாரால்?

அரசன்:—திருதராஷ்டிரரின் புதல்வர்களால்!

பகவான்:—'திருதராஷ்டிரரின் குமாரர்களால்' [என்று, தனக்குள்] ஹா! கஷ்டம்!

ஊகொாஃகத்வம் வஜ ு நா8 ஜொகெ
8நவ்ஷிநா௦ கு௦வயெத 8நா௦ஷி।
ைவொவி்ரியைெஷஹி-க்ரு தாவஙாயெ
யஷ்தத்ரு8ஷாஹிஸிவாவஙாஜ்ழ॥

தாயத்தாரால் செய்யப்படும் அக்கிரமமானது, உலகத்தில் நல்லோர்மனத்தைத் துன்புறுத்துகிறது. யாதொரு குற்றமும் செய்யாதவரிடத்தில் திருதராஷ்டிரகுமாரர்கள் செய்த கெடுதியால், உண்மையில் நாமே தீங்கிழைத்ததுபோல் தோன்றுகிறது.

அரசன்:—பகவானே! இப்பொழுது எதைப்பற்றியோசிக்கிறீர்?

பகவான்:—ஒன்றுமில்லை; அப்படிச்செய்வது அவர்களுக்கு உற்சாகம்போலும்.

அரசன்:—இன்றுமுதல் அவர்களுடைய செருக்கு அடங்கிவிட்டது. பலவானானாலும், யுதிஷ்டிரர் பொறுத்துக்கொள்வார்; நான் பொறுக்கமாட்டேன்.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B.A. B.L.,

உ

திருவாளர். ராவ்ஸாஹேப்

# வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள்

## எண்பதாம் ஆண்டுநிறைவுவிழா

# மங்கலவாழ்த்து.

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலையாசிரியர் நல்லசிவன்பிள்ளையவர்கள்
இயற்றியது.

1 முந்தை நான்மறை முடியினின் றூடிடு முதல்வன்
வந்து வேய்வனத் திலிங்கமாம் வடிவுடன் வயங்குஞ்
சந்த மார்ந்தபல் சிறப்புறு சாலிவே லியெனக்
கந்த மார்ந்ததண் பொருநைசே ரொருபதி கவினும்.

2 ஒப்பி லப்பதிக் குறுகுட பாலினி லோங்கு
திப்பி யப்பதி யாய்த்திகழ்ந் தெங்கணுஞ் சிறந்தோர்க்
கெய்ப்பில் வைப்பென விசைவெள்ள காலேனு மெழிலார்
சுப்பி ரப்பதிச் சுப்பிர மணியப்பேர்த் தோன்றல்;

3 தொண்டை மண்டல முதன்மையோர் மரபினிற் றோன்றி
யெண்டி சைக்கணுந் தன்பெயர் விளங்கவந் திருநீர்
மண்ட லத்தையாள் மன்னவர் மகிழ்வுடன் வழங்கு
திண்டி றற்பெறு பட்டமும் புனைதரு சீலன்;

4 தராத லத்தில்ராவ் ஸாஹேபென் றியாவருஞ் சாற்றிப்
பராவு றும்புகழ் படைத்தவன் விலங்கிஞேய் பாற்றிக்
கராச லத்தைமுன் காத்திடு கடவுள்போற் காத்தோன்
புராத னப்புகழ் வழிவழி பொருந்துறு புனிதன்;

5 கல்வி சான்றஅண் ணாமலைப் பல்கலைக் கழகத்
தில்வி யற்றமிழ்ச் சோதனைத் தலைமையேற் றிருந்தோன்
மல்கு சீர்மது ரைத்தமிழ்ச் சங்கத்து மாண்பு
நல்கு வித்தியா லோசனைச் சபையங்க நல்லோன்;

6 ஆங்கி லத்தினுந் தமிழினு மரியநூ லாய்ந்து
தேங்க னிச்சுவை யெனப்பல நூறரு சீரோன்
ஈங்கி வள்ளறன் முதுமையு மிளமையா வெண்ணி
ஓங்கு நூறரு முழைப்பினுக் குவந்திடா ருளரோ !

7 நீதி யார்ந்திடு சுவர்க்கத்தி னீக்கமு நெறிசேர்
கோதி லாததோர் கோம்பியின் விருத்தமும் குணமிக்
கோது நெல்லையின் சிலேடையும் அகலிகை யெனுமோர்
மாத ராள்பெயர்த் தனிமுதற் பாவுமிவ் வகையே,

8 அரிய நூல்பல வியற்றியு மாங்கில மொழியின்
விரியு நூறமி ழாக்கியு மேதகு கல்விப்
பெரிய னுக்கிய கம்பரா மாயணப் பெருநூல்
தெரிய யாவர்க்கு மப்பெயர்ச் சாரநூற் றெளித்தே !

9 தொகுத்து நல்லுரை வரைந்துமின் னனபல தொண்டு
மகத்து வம்பெற தமிழினுக் கியற்றுமிவ் வள்ளற்
கிகத்தில் யாஞ்செய்கைம் மாறுமுண் டோவென வெண்ணி
மிகத்தெ ளிந்தநூ லறிஞர்பல் லோர்தமில் விரவி,

10 இந்த வுத்தமப் பெரியனுக் கெண்பதாம் வயது
முந்து பூர்த்தியின் விழாவினை முதுதமி ழுலகிற்
சிந்தை யார்வமோ டுண்டுகோண் டாடலே தெளிந்த
நந்த மக்குறு கடமையென் றியாவரு நயந்து,

11 ஈசு ரப்பெய ராண்டினிற் கடகத்தி லிரவி
தேசு றத்திகழ் மதிபதி னேழ்திக தியினிற்
பேசு றுங்கதிர் வாரத்திற் பிறங்குகார்த் திகைநாள்
வீசு றும்புகழ்ச் சுப்பிர மணியமே லோற்கு,

12 எண்ப தாண்டிவ ணிறைவுறு விழாவினை யியற்று
நண்பர் யாவரும் வாழியிவ் விழாப்பெறு நல்லோன்
பண்போ டின்னுநற் பலவபி டேகங்கள் படைத்து
வண்பு வித்தலத் திசையுடன் வாழிய மகிழ்ந்தே.

**மதுரைத்தமிழ்ச்சங்கத்தார்.**

# புல்லையந்தாதி.

[௩00-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

81 மாவ னஞ்செறி புல்லையின் மருவுமா னந்த
கோவ னந்தனன் கோவியர் கலைகவர்ந் தொளிக்குந்
தேவ னந்தனைத் தொழும்புசெய் சிந்தையே நமக்குப்
பாவ னந்துநா நினைந்ததும் பலிக்குமிப் படிக்கே.

82 படிக்க லாந்திருப் புல்லையிற் பானிசை படித்தே
நடிக்க லாந்திரு நாமமா மமுதத்தை நாவாற்
குடிக்க லாநமன் கொட்டத்தை யடக்கியே வெருட்டி
யடிக்க லாமய ராகது துதித்திடா யகமே.

83 அகத்தி னுல்வரு மாசையை யகலவே துரத்திச்
சகத்தில் வஞ்சக மாயையைத் தன்னுளே யடக்கி
மகத்து வம்பெறு புல்லைமா திருவடி வணங்கிச்
சுகித்த பேர்க்கலாற் றெரியுமோ சொருபநிச் சயமே.

84 நிச்ச யங்களில் லாதபொல் லாவஞ்ச நினைவுந்
துச்ச மாகிய புன்மையே பொருந்துபுன் றொழிலு
மச்ச மானதும் பெறுங்கொடி யேனையென் றுள்வாய்
நச்ச ராவினில் விழிதுயில் புல்லைநா யகனே.

85 நாய காசெக நாதசற் குருவென்று நாவா
னீய லாயுதன் றுணையென்று மெதுகுல னென்றுந்
தூய நான்மறைப் பொருளென்று மூனைத்துதித் தறியேன்
மாயை தீர்த்தருள் வாய்திருப் புல்லையின் மாலே.

86 மாலை யைப்பெரு மதியத்தி லேவர வழைக்கத்
தூல சக்கரம் விணில்விடு சுந்தரத் தோளா
சால நற்புவி புரந்தருள் புல்லைமா தவனே
நீல மைப்புய லேயெனை நிதமகிழ்ந் தருளே.

87 அருளி லாமையும் வஞ்சகத் தொழிலுமவ் வவர்கள்
பொருளை லாமப கரித்திடும் புத்தியும் பொருந்து
மருளை நீக்கியட் டாக்கர வடிவமே புல்லைத்
திரும ணாளவென் றீவினை தீர்த்தரு டேவே.

88 தீர்த்த மாவது சக்கர தீர்த்தமே தீர்த்தங்
கீர்த்த னத்திலுன் னுயிர நாமகீர்த் தனமே
மூர்த்தி யாவது புல்லையின் மூர்த்திநீ யலது
வார்த்தை வேறுள தோபுல்லை மருவுதற் பரனே.

89 பரம னேசர ணும்புயர் தன்னையே பணிந்தேன்
வரமெ னக்கொரு பொருளுள தவ்வர மெதெனில்
இரவெ னப்பக லெனவரு மிரண்டிலா விடத்திற்
றிரமெ னப்பதி புல்லையிற் றெய்வநா யகனே.

90 அகந்தை யாகுமஞ் ஞானத்தி லுழன்றழன் றலைந்துஞ்
சுகந்த மாமுலை மாதர்கண் வலையினிற் சுழன்று
மிகம்பெ றேன்பர மும்பெறே னென்செய்வே னுள்வாய்
முகுந்த மாதவ புல்லையி னெந்தனி முதலே.

91 தனிமுத திருப்புல்லாணி யரசுநிழ லச்சுதாவு
.....................................னுடன்மீதே
கனி......... டுத்ததூய வுனைநினைவில் வைத்திடாத
கசடர்மதி யிற்புகாத திருமாலே
நனிமலர் முடித்தகோதை யமுதுட னுதித்தபேதை
நளினமல ரிற்பொன்மாதை யணிமார்வா
இனியுனை மறப்பிலாமை நினைவினி லிருத்திநாளு
மெளியன்மன திற்குலாவி மருவாயே.

92 மருமலர் முடித்தமார்வி னிருமுலை குலுக்கிமேனி
வதனமு மினுக்கியேகண் வலைவீசி
யுருகவு மயக்கியாசை பெருகவு நெளிக்குமாத
ருறவின்மனம் வைத்தெந்நாளு முழல்வேனோ
கருமுகி னிகர்த்தமேனி யழகுள சமர்த்தநீடு
கருணையது வைத்தென்மீதி லருள்வாயே
அருமறையி னுச்சிதேடு திருவளர் திருப்புல்லாணி
யரசுநிழ லிற்குலாவு பெருமானே.

93 பெருவயிறு கண்டமாலை யுதரவலி யண்டவாயு
பிரமிய கிரந்திசூலை தலைநோவும்
இருமலொடு தந்தவாயு குருடுசெவி டுஞ்சொலூமை
யிவைகண்முத ரெந்தரோக வினையாவும்
ஒருநொடியி லஞ்சியோடும் வறுமையொடு சஞ்சிதாதி
யுபரியி னடந்தபாவ மதுதானும்
மருமலர் பிறந்தகோதை மருவிவள ரும்புல்லாணி
வளரரசு கண்டபேரை யணுகாதே.

**வித்வான். ரெ. இராமையங்கார்.**

உ

# யவனர்வரலாறு.

[யாழ்ப்பாணம் ஸ்ரீமான். த. இராமநாதபிள்ளை, B.A., (LOND.) அவர்கள்.]

(௯0௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

## உரோமாபுரியின் உண்ணாட்டுவரலாறு.

### உரோமாபுரியும் அதன்குடிகளும்.

தாய்நாட்டுக்குடிகளையும் ஆட்சிநாட்டுக்குடிகளையும் ஒரு குடைக்கீழ் ஆளும் முறைகளில் உரோமரது அரசியன்முறையே சிறந்ததெனின் அது ஒருவாறு பொருந்தும். சிலர் ஆட்சிநாடுகளிடம் திறைவாங்குதலொழிய அந்நாடுகட்குத் தம் அரசியற் கடமைகளைச் செய்கின்றிலர்; சிலர் ஆட்சிநாடுகளை அடிமைநாடுகளாக எண்ணி ஒரு சுதந்தரமும் அளியாமல் கொடுங்கோல் செலுத்துகின்றனர். உரோமர் வெற்றியாற் பெற்ற நாடுகளில் எங்ஙனம் செங்கோல் செலுத்தினர் என்பதை நோக்குவோம். உரோமர், பழங்குடிகளென்றும் குடியேற்றக்குடிகளென்றும் உரோமநாட்டுக்குடிகளாதற்கு உரிமைபெற்றோர் என்றும் குடியுரிமை பெறுதோரென்றும் பலபிரிவுடைய ஒரு பெருங்குழுவினராகலின் அப்பகுப்புக்களின் சிறப்புரிமைகளைப்பற்றி ஆராய்தல் அவசியம். பிறசாதியாரை வென்று துணைவராக்கலும் தம்குடிகளாக்கலும் அடிமைகளாக்கலும் என்னும் பல்வேறுமுறைகளை உரோமர் கைக்கொண்டனர். உரோமராட்சிக்குட்பட்ட பிறசாதியார் சுயாதீனத்தை யிழந்து உரோமநாட்டுக்குடிகளின் சிற்சில உரிமைகளைமாத்திரம் பெற்றனர்.

உரோமநாட்டுக்குடிகள் தெரிவுரிமையுடையோரென்றும் தெரிவுரிமையில்லாதோரென்றும் இருபிரிவினராயினர். தெரிவுரிமையுடைய குடிகள், நிலம் வாங்கல் விற்றல் ஆட்சிசெய்தல் என்னும் பண்டமாற்றுரிமையும் "Ins Commerce" உரோமநாட்டுக் குடிகளுக்குரிய மணவுரிமையும் (Ins Conubic) அமைச்சராகுமுரிமையும் கொலைத்தண்டனைக்கு எதிராக முறைகேட்கும் உரிமையும் சமய உரிமையும் எனப் பல உரிமைகளுடையோராய் வாழ்ந்தனர். தெரிவுரிமையில்லாதோர், பண்டமாற்றுரிமையும்

மணவுரிமையும்மாத்திரம் உடையவராயிருந்தனர். துணை நாட்டாருக்கு இப்பண்டமாற்றுரிமையும் மணவுரிமையும் அளித்தல் வழக்கம். மணவுரிமையென்பது மேன்மக்கட்குலத்தில் மணஞ்செய்து மேன்மக்கட்சபைக்கு அங்கத்தினராகும் உரிமை. கீழ்மக்களுக்கு அவ்வுரிமை அளிக்கப்படவில்லை. தெரிவுரிமை என்பது தலைவர்களைத் தெரிந்தெடுக்கும் உரிமை. உரோமர் பொதுமக்கட்சபைமூலமாகவும் படைவீரருடையசபைமூலமாகவும் தெரிவுசெய்தனர். பொதுமக்கட்சபையை வகுப்பினர்சபை எனினும் பொருந்தும். உரோமர் வகுப்புவகுப்பாகச் சென்று தெரிவுகளை நடாத்தினர். இவ்வகுப்பினர்சபை போர்தொடங்கல் சமாதான உடன்படிக்கையை அங்கீகரித்தல் பிரமாணங்களையாக்குதல் என்னும் உரிமைகளையுடையது. படைவீரரின்சபை படையிற் சேவைசெய்யும் வீரரை அங்கத்தினராகவுடையது. படைவீரர் நூறுநூறுகூட்டமாகித் தலைவர்களைத் தெரிந்தெடுத்தல் உண்டு. இவ் விருசபைகளின் உரிமைகளையும் மேன்மக்கட்சபை பெரும்பாலும் கவர்ந்தது.

## தெரிவுரிமையுடைய உரோமநாட்டுக்குடிகள்.

அடிமைகளுக்கு அடிமைநீங்கியவழியும் தெரிவுரிமையுடைய உரோமநாட்டுக்குடிகளாகும் உரிமை யில்லை. உரோமாபுரியில் வசிக்கும் உரோமரும், குடியேற்றநாட்டில்வசிக்கும் உரோமரும் துணைநாடுகளில் வசிக்கும் மக்களும் உரோமக்குடிகள் எனப்படுவர். இலத்தீன் நாடுகளெல்லாம் இத்தகைய நாடுகளாயின. உரோமர் தாம் போரில் வென்ற நாடுகளில் உரோமநாட்டுமக்களுள் நல்கூர்ந்தோரைக் குடியேற்றுதல் வழக்கம். அக்குடியேற்ற நாடுகள் உரோமராச்சியத்தின் காவற்கோட்டைகளாயின. அக்குடியேற்றநாட்டார் தேர்தற்காலங்களில் உரோமாபுரிக்குப்போய்த் தெரிவுசெய்யும் உரிமையுடையவர்கள். அக்குடியேற்றநாடுகள் உரோமாபுரத்தலைவர்களாலேயே ஆளப்பட்டன.

தெரிவுரிமையில்லாதோரும் சிலநாடுகளிற் குடியேற்றப்பட்டனர். இத்தகைய குடியேற்றநாடுகளில் நகரசபையே கூடக்கூடாது. கிராமச்சங்கங்களும் இந்நாடுகளுக்கு மறுக்கப்பட்டன. இந்நாடுகளில் உரோமர்தலைவர் தாம் விரும்பிய பிரமாணங்களை ஏற்படுத்திக் கொடுங்கோல்செலுத்தினர்.

## உரோமருடைய குடியேற்றநாடுகள்.

இங்ஙனம் உரோமர் தம்குடிகளாலும் இலத்தீன் துணைக் குடிகளாலும் பலகுடியேற்றநாடுகளை இத்தாலிதேசமெங்கும் நாட்டினர். கி.மு. 305-ல் இலத்தீனியர் உரோமரோடு பகைத்தமையால் உரோமநாட்டுக்குடிகளாகும் உரிமையை இழந்தனர். கி. மு. 268-ல் உரோமநாட்டுக்குடிகளாகும் உரிமை இலத்தீனியருக்கு முழுதும் மறுக்கப்பட்டது. உரோமர்தலைவர்கள், உரோமாபுரிக் குடிகளை இத்தாலியாதேசத்துநெய்தல்நிலங்களாகிய கடற்கரையையடுத்த நாடுகளிலும், இலத்தீன்குடிகளை மலைப்பக்கங்களிலும் குடியேற்றினர்கள். குடியேறும் மக்களுக்கு வயல்நிலங்களும் புல்வளரும் நிலங்களும் அளிக்கப்பட்டன. தோல்வியடைந்தோருடைய கழனிகளையும் புற்றரைகளையும் இங்ஙனம் தமது தெரிவுரிமையுடைய குடிகளுக்கு உரோமர் அளித்தனர். தோல்வியடைந்தநாட்டோரைத் தெரிவுரிமையில்லாதகுடிகளாக உரோமர் ஆண்டனர். இங்ஙனம் பலநாடுகளை வருடந்தோறும் வென்று தம் குடிகளைக் குடியேற்றி உரோமர் தமது ஆணையைச்செலுத்தித் தமது நாகரிகத்தையும் பரப்பினர்கள்.

## உரோமநாட்டுக் கீழ்மக்களது வாழ்க்கைப்போராட்டம்.

சரித்திரகாலத்திற்குமுன்னரே உரோமர் மேல்மக்கள் கீழ் மக்கள் என இருபிரிவினராகிக் கலகப்பட்டனர். கீழ்மக்களின் வாழ்க்கைநிலையை ஈண்டு ஆராய்வோம். கீழ்மக்களுக்குக் குதிரை வீரராகச் சேவைசெய்யும் உரிமை யில்லை; மேன்மக்கட்சபைக்கு அங்கத்தினரைத் தெரிந்தெடுக்குமுரிமையும் இல்லை. மேன்மக்களே அரசியலை நடாத்தியும் நிலம்முதலியவற்றைக் கீழ்மக்களைக் கொண்டு உழுவித்துப் பண்படுத்தியும் வந்தார்கள். கீழ்மக்கள் சிறு கமங்களை உடையோராயிருந்தும், மழையின்மையாலும் பல போர்களிற் சேவைசெய்யவேண்டியவர்களாயிருந்தமையாலும் மேன்மக்களின் கொடுமையாலும் கடன்காரர்களாகிச் சிறைச்சாலைகளில் இடப்பட்டனர். குறிக்கப்பட்டகாலத்துக்குள் கடன்காரர் கடனை இறுக்காவிட்டால் அடிமைவேலைசெய்யவேண்டுமென்பது பிரமாணம். அந்தப்பிரமாணத்தால் கீழ்மக்களின் வாழ்க்கைத்துயரங்களை நாம் ஒருவாறு உணரலாம். கீழ்மக்கள் மேன்மக்களோடு பந்திபோசனஞ்செய்ய இயலாது. மேன்மக்கள் கீழ்க்குலப்

பெண்களை மணந்தால் அவருடைய பிள்ளைகள் தெரிவுரிமையில்லாத கீழ்மக்களாகவே எண்ணப்படுவர். கீழ்மக்களைத் தலைவர்களாக ஒருபொழுதும் தெரிவுசெய்யாமையால் பிரமாணங்களைத் தமது நன்மைக்கே மேன்மக்கள் ஏற்படுத்துகின்றனரென்பதைக் கீழ் மக்கள் அறிந்து கி. மு. 495-ல் மேன்மக்களோடு ஒத்துழையாமல் உரோமாபுரியினின்றும் நீங்கி ஒத்துழையாமலையில் தங்கினர்கள். அக்காலத்தில் வல்சியரோடு உரோமர் பகைத்தமையால் மேன் மக்கள் கீழ்மக்களையழைத்து, அவர்களுக்கு இரண்டுகீழ்மக்கட் காவலரைத்தெரிந்தெடுக்குமுரிமையையளித்தனர். கீழ்மக்கட்காவ லன் கீழ்மக்களைத் தலைவர்கள் உத்தியோகத்தர் முதலியோருடைய அநீதிகளினின்றும் காக்கும்வல்லமையுடையவன். அக்கீழ்மக்கட் காவலரை வருடமொருமுறை வகுப்பினர்சபையிற் கூடும் பொது சனங்கள் தெரிவுசெய்தார்கள். இணைத்தலைவர் (consul) ஒருகீழ் மகனைத் தண்டித்தால் அக்கீழ்மக்கட்காவலர் அத்தண்டனையை நிறுத்தலாம். இணைத்தலைவர் யாதாயினும் பிழைசெய்தால் அவர் களைத் தண்டிக்கும் உரிமை கீழ்மக்கட்காவலர்க்குமாத்திரம் உண்டு. இணைத்தலைவரின் அரசியன்முயற்சிகள் எதையும் கீழ் மக்கட்காவலர் தடுக்கலாம். ஒரு கீழ்மக்கட்காவலன் இணைத் தலைவருள் ஒருவன் தீர்ப்பைத் தடுக்க, மற்றக்காவலன் தடுத்த காவலனைத் தடுத்தானாயின், இணைத்தலைவருள் ஒருவன் தான் எடுத்துக்கொண்ட முயற்சியைச் செய்யலாம். இவ்வுபாயத்தால் மேன்மக்கள் கீழ்மக்கட்காவலரை ஒருவரோடொருவர் மாறுபடச் செய்து தம் எண்ணங்களை நிறைவேற்றிவந்தனர். கீழ்மக்கட் காவலருக்குப் பிரேரணைகளைப் பிரேரித்துப் பிரமாணங்களையுண் டாக்கும் உரிமையில்லை. பிற்காலங்களிற் கீழ்மக்கட்காவலர் கீழ் மக்கட்சபையில் பிரமாணங்களை உண்டாக்கினர்கள். கீழ்மக்கட் காவலன் சொற்பொழிவுசெய்யும்போது ஒருவரும் குழப்பஞ் செய்யக்கூடாது. கி. மு. 471-முதல் கி. மு. 449 வரை மேன் மக்களும் கீழ்மக்களும் (curiala) வகுப்பினர்சபையில் ஒருங்கு கூடுதல் வழக்கமென அறியக்கிடக்கிறது. இங்ஙனம் ஒருங்கு கூடியிருத்தலால் கீழ்மக்களும் உரோமர் வகுப்பினராகப் பிரிக்கப் பட்டிருத்தல்வேண்டும் என்பது வெளியாகும். அவ்வகுப்பினர் சபைக்கு வகுப்புக்கள் ஒவ்வொன்றும் தத்தம் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கலாம்; தலைவர்களைத்தண்டிக்கும் ஆற்றலொழியப்

பிரமாணங்களைப் பிரேரிக்கும் உரிமை வகுப்பினர்சபைக்கு அளிக்கப்படவில்லை. பிற்காலங்களிற் பிரமாணங்களை ஆக்கும் உரிமையும் வகுப்பினர்சபை பெற்றது. கீழ்மக்கள் தெரிவுரிமை பெற்றும் பொருளின்மையால் அதை உபயோகிக்க இயலாதிருந்தனர். குறிக்கப்பட்ட பொருளுடையோருக்கே தெரிவுரிமை யளிக்கப்பட்டதாகலின் உரோமநாட்டுமக்களெல்லாருக்கும் தெரிவுரிமை அளிக்கப்படவில்லை என்பது வெளிப்படை.

கீழ்மக்களுக்குப் பிரமாணங்கள் யாவை என்றும் குற்றங்கள் எத்தன்மையவென்றும் தெரியாமையால், சமயப்பிரமாணங்களையும் அரசியற்பிரமாணங்களையும், பிற பிரமாணங்களையும் முறைப்படுத்தி ஏடுகளாக வகுத்தற்கு கி. மு. 451-ஆம் ஆண்டு கணக்கர் பதின்மர்கூட்டம் ஒன்று, அப்பியஸ்குளோடியனுடைய ஆதரவின் கீழ் அமைக்கப்பட்ட பிரமாணங்களைப் பன்னிரண்டு புத்தகங்களாக எழுதிற்று. பிரமாணங்களை நூலாகத் தொகுத்தது மக்கள் யாவருக்கும் ஒரு பெரிய நன்மையாயிற்று.

கீழ்மக்கள் தங்கள்குறைகளைத் தெளிந்து அவற்றைப் போக்கிக்கொள்ளுவதற்காகக் கூட்டங்கூடுதல் வழக்கம். கீழ்மக்கள் இங்ஙனம் கூடுதற்குப் பிரமாணமில்லையாயினும் காலக்கிரமத்தில் இக்கூட்டம் பிரமாணங்களை ஆக்கும் உரிமைகள் சிலவற்றைப் பெற்றது. வலேறியஸ்கொருசியஸ் பிரமாணத்தால் கீழ்மக்கட்சபையின் தீர்மானங்கள் மேன்மக்கள் கீழ்மக்கள் என்னும் உரோமநாட்டுக் குடிகள் யாவருக்கும் பிரமாணமாகும் என அறிவிக்கப்பட்டது. கி. மு. 445-ல் கீழ்மக்களும் இணைத்தலைவராகத் தெரிந்தெடுக்கப்படும் உரிமைபெற்றனர். கி. மு. 339ல் பப்பிளிஸ் பைலோ என்னும் கீழ்மகன் ஒருவன் இணைத்தலைவருள் ஒருவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டனன். தேசநேசன் மான்லியஸ் கீழ்மக்கள் கடன்களைத் தன்பொருளைக்கொடுத்துத் தீர்த்தான். அவன் கீழ்மக்கட்குலத்துக் கமக்காரரின் நன்மைக்காகவும் முயன்று புகழ்பெற்றானாகை, மேன்மக்கள் அவனை மலையினின்று வீழ்த்திக் கொன்றனர். ஸகலியஸ் பொதுநிலங்களிற் கீழ்மக்கள் கடமைகொடாமலே தம்முடைய பட்டிமாடுகளை மேய்க்க உத்தரவளித்தற்குத் தீர்மானமொன்றைப் பிரேரித்தானாகைபால் அவனும் கொல்லப்பட்டான்.

கி. மு. 367-ஆம் ஆண்டில் இலிசினியஸ் ஸ்தாலோ இணைத் தலைவருள் ஒருவன் கீழ்மகனாதல்வேண்டுமென்னும் பிரமாணத்தை ஏற்படுத்தினான். பிரமாணக்கணக்கர் பதின்மரில் ஐவர் கீழ்மக்களாதல்வேண்டுமென்பதையும் தீர்மானித்தான். உழுவித்துண்ணும் வேளாளர், தம் வயல்களில் ஊழியஞ்செய்வோரில் ஒத்த தொகையினராகக் கீழ்மக்களை அமைத்துக்கொள்ளவேண்டும் என்பது பிரமாணமாயிற்று. மேன்மக்கள் அடிமைகளை மலிவாக வாங்கித் தம் கமங்களில் ஊழியஞ்செய்வித்தனராகையால், கீழ்மக்கள் தொழிலற்றுத்துயருற்றனர்; கீழ்மக்களுக்குத் தொழில் கொடுப்பதற்கு இப்பிரமாணம் அவசியமாயிற்று. கீழ்மக்கள் பூசாரிகளாகும் உரிமையும் கிரியைகளை நடத்தும் குருவாகும் உரிமையும் பெற்றனர். பின்பு கீழ்மக்களுக்கு உரிமைகள் மிகுந்தனவென மேன்மக்கள் ஆரவாரித்து இவ்வுரிமைகளைக் குறைக்க முயன்றனர். இங்ஙனம் குறைத்தற்காக இணைத்தலைவருக்கு வேலைமிகுந்ததெனக் கீழ்த்தலைவர்களைத் (Proctors) தெரிந்து கீழ்த்தலைவர்களே நீதிவிசாரணை செய்தற்குரியரென மேன்மக்கள் தீர்மானித்தார்கள். பிற்காலத்தில் உள்நாட்டுத்தலைவர் புறநாட்டுத் தலைவர் சிறுபடைத்தலைவர் சுகாதாரத்தலைவர் அங்காடித்தலைவர் வீதித்தலைவர் நீர்த்தலைவர் அளவைத்தலைவர் எனக் கீழ்த்தலைவர் பலர் தெரிந்தெடுக்கப்பட்டனர். இக்கீழ்த்தலைவருக்குக்கீழ்க் கிராமத்தலைவர்கள் (aediles) விழாக்களை நடத்தற்கும் தெருக்காவல் செய்தற்கும் ஏற்படுத்தப்பட்டார்கள்.

இனி மேன்மக்கட்சபையின் அங்கத்தினர் மேன்மக்களோ அல்லரோ எனவும், அங்கத்தினராதற்கு வைத்திருக்கவேண்டிய பொருள் நிலம் முதலியவற்றை உடையவரோ அல்லரோ எனவும் ஆராய்தற்கு உரிமைக்கணக்கனொருவன் வேண்டுமென நிச்சயிக்கப்பட்டது. உரிமைக்கணக்கன் மேன்மக்கட்சபையங்கத்தினராகும் உரிமையில்லாதோரைச் சபையினின்றும் நீக்குமாற்றலுடையவன். புதுமேன்மக்களை அங்கத்தினராக்கும் உரிமையும் அவனுக்குண்டு. பிரமாணங்களை மீறியொழுகுபவரையும் தண்டிக்கும் ஆற்றல் உடையவனாகலின் உரிமைக்கணக்கன் ஒருபெருந்தலைவனாவன். உரிமைக்கணக்கன் உரோமநாட்டுக்குடிகள் எல்லாருடைய உரிமைகளையும் கணக்கிட்டுத் தேர்ந்து பிரமாணங்களின் படியே உரிமைகளைக் குடிகள் செலுத்துகிறார்களா என்பதை

விசாரணைசெய்தான். காமம், கொலை, களவு முதலிய குற்றங்கள் செய்யும் தீயோருக்கு மேன்மக்கட்சபைக்கும் வகுப்பினர்சபைக்கும் வீரர்சபைக்கும் உறுப்பினரைத் தெரிவுசெய்யும் உரிமைகளை மறுக்கும் ஆற்றலுடையவனுதலின் உரிமைக்கணக்கன் பெரிய அதிகாரியானுன். இங்ஙனம் சமய ஒழுக்கம் ஆசாரம் முதலியவற்றை உரிமைக்கணக்கன் காத்துவந்தான். உரிமைக்கணக்கர் சிற்சிலகாலங்களில் மட்டும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

கி. மு. 339-ஆம் ஆண்டில் கீழ்மக்கள் பல உரிமைகளைச் செலுத்தினர் என்று தெரிகிறது. கீழ்மகன் பைலோ தனித்தலைவனுக நியமிக்கப்பட்டான். முற்காலங்களில் மேன்மக்கட்சபை அங்கிகரியாத தீர்மானம் ஒன்றும் பிரமாணமாகாது. பைலோவின் தீர்மானத்தால் கீழ்மக்கட்சபையின் தீர்மானங்கள் பிரமாணங்களாயின. பைலோ நயந்த பிரமாணங்கள் பின்வருமாறு: 1. கீழ்மக்கட்சபையின் பிரமாணங்கள் பிரசைகள் யாவர்க்கும் ஒத்த பிரமாணமாகும். 2. மேன்மக்கட்சபை படைவீரர்சபைத்தீர்மானங்களைப் பேணுதல்வேண்டும். 3. உரிமைக்கணக்கர் இருவர் தெரியப்படின் ஒருவன் கீழ்மகனுதல்வேண்டும். இப்பிரமாணங்களால் கீழ்மக்கள் மேன்மக்கட்குரிய உரிமைகள் யாவற்றையும் பெற்றனர். கி.மு. 311-ல் கீழ்மக்கள் எல்லா உரிமைகளையும் பெற்றனர். கி.மு. 287-ல் கீழ்மக்கள் ஒத்துழையாமை இயக்கத்தை நடாத்தித் தாம் பெறவேண்டிய எஞ்சிய உரிமைகள் யாவற்றையும் பெற்றுர்கள். இங்ஙனம் உரிமைகளைப் பெற்றுலும் கீழ்மக்கள் நெடுங்காலமாக வறியோராயிருந்தமையால் மேன்மக்களால் துன்புறுத்தப்பட்டேயிருந்தனர். பிற்காலங்களிற் கீழ்மக்கள் மேன்மக்கள் என்னும் பிரிவுகள் தொழிற்கட்சி பொருட்கட்சிகளாக மாறின. உலகில் வாழ்க்கைப்போராட்டம் எப்பொழுதும் உண்டென்பதையும் மக்கள் கட்சிகளாகப்பிரிந்து கலகப்படுதல் இயல்பென்பதையும் இக்கீழ்மக்களின் கலகத்தால் நாம் உணரலாம்.

[தொடரும்.]

ஸ்ரீ:

# மதிப்புரை.

ஸ்ரீஆண்டாள் திருமணம்:—இது, திருமலைநல்லான். ஸ்ரீமான். T. ராமகிருஷ்ணையங்கார் (சிரோமணி) என்பவரால் இயற்றப்பட்ட நாடகம். இதில் ஆண்டாள் திருமணத்தை விஷயமாகக்கொண்டு அதற்கேற்ற நாடகபாத்திரங்களைக் கற்பித்துப் படிப்பதற்கு விருப்புண்டாகும் சம்பாஷணங்களுடன் திருப்பாவையின் கருத்துக்களும் எழுதப்பெற்றுள்ளன. திவ்யப்பிரபந்தங்களின் பாசுரங்களையும் அர்த்தங்களையும் ஆங்காங்கமைத்தும், வேண்டுமிடங்களில் ஆக்கியோர் தாமியற்றிய பாடல்களையும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு சேர்த்தும் இது, எழுதப்பெற்றிருப்பதாகத்தெரிகிறது. இந்நாடகத்தில் காவ்யரஸங்களமையும்படியெழுதும் மனோபாவம் நன்கு விளங்குகிறது. இது வைணவ ஸமயிகள் விரும்பிப்படிக்கத் தக்கது. இதன் விலை அணா 0—8—0

வேண்டுவோர், 'திருமலைநல்லான். T. ராமகிருஷ்ணையங்கார் (சிரோமணி), ஆழ்வார்திருநகரி' என்ற விலாசத்திற் பெறலாம்.

---

கதிரகாமப்பிள்ளைத்தமிழ்:—இது, கொழும்பு விவேகாநந்தசபையியற்றமிழாசிரியர். சிவங். கருணாலய பாண்டியப்புலவர் என்பவரால் கதிரகாமத்தலத்து முருகன்மீது பாடப்பட்டது; பதினான்கு பருவங்களடங்கியது; பருவமொன்றுக்கு மூன்றுபாவாக நாற்பத்திரண்டு பாட்டுக்களுள்ளது; இதிலுள்ள செய்யுளெல்லாம் சிறந்த கருத்தமைந்து சுவைபயப்பனவாயுள்ளன.

இதற்குப் பொருளினிதுவிளக்குவதோர் ஆராய்ச்சிக் குறிப்புரையும் வரைந்துதவப்பெற்றுள்ளது. இதன்விலை ரூ 1—0—0

வேண்டுவோர், 'சிவங். கருணாலயபாண்டியப்புலவர், விவேகானந்தசபை, மேட்டுத்தெரு, கொழும்பு' என்ற விலாசத்திற்பெறலாம்.

---

உ

# ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1937-ஆம்௵ மார்ச்சு௴ 6௳ நடத்திய ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகளில் தேறிப் பரிசும், யோக்கியதாபத்திரமும் பெறும் மாணாக்கர்களின் அபிதானபத்திரம்.

## பி. ஏ., பரீக்ஷை.

### 2-வது வகுப்பு.

| தொடர் நம்பர். | ரிஜிஸ்டர் நம்பர். | |
|---|---|---|
| 1 | 17 | P. சுந்தரமூர்த்தி, கவர்ன்மெண்ட் காலேஜ், கும்பகோணம். |
| 2 | 19 | S. சங்கரசுப்பு, மதுரை திரவியம் தாயுமானவர் ஹிந்து காலேஜ், திருநெல்வேலி. |
| 3 | 6 | S. M. சின்னப்பன், ஸெயின்ட்ஜோசப் காலேஜ், திருச்சி. |
| 4 | 15 | M. சௌரிராஜன், ஷை ஷை |
| 5 | 26 | R. K. வரதராஜன், ஸெயின்ட் ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 6 | 24 | A. தேவதாஸ்மணி, ஷை ஷை |
| 7 | 18 | M. ராமரத்தினம், மதுரை திரவியம் தாயுமானவர் ஹிந்து காலேஜ், திருநெல்வேலி. |
| 8 | 28 | A. முனியப்பன், ஸெயின்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 9 | 12 | P. V. இராமமூர்த்தி, ஸெயின்ட்ஜோஸப் காலேஜ், திருச்சி. |
| 10 | 4 | T. M. மீனாட்சிசுந்தரம், நாஷனல் காலேஜ், திருச்சி. |
| 11 | 1 | T. S. சுந்தரம், அமெரிக்கன் காலேஜ், மதுரை. |
| 12 | 7 | V. A. குருசாமி, ஸெயின்ட்ஜோஸப் காலேஜ், திருச்சி. |
| 13 | 3 | C. சௌந்தரராஜுலு நாயுடு, நாஷனல் காலேஜ், திருச்சி. |
| 14 | 22 | S. சுப்பிரமணியன், லயோலா காலேஜ், சென்னை. |
| 15 | 10 | T. G. முகுந்தன், ஸெயின்ட்ஜோஸப் காலேஜ், திருச்சி. |

## எப்.ஏ., பரீக்ஷை.

### 2-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 57 | M. சிதம்பரம், ஸ்காட்கிறிஸ்டியன் காலேஜ், நாகர்கோயில். |
| 2 | 66 | S. நாவலடிரங்கநாதன், முனிசிபல் காலேஜ், சேலம். |
| 3 | 58 | S. பொன்னீலவடிவு நாடார், ஸ்காட்கிறிஸ்டியன் காலேஜ், நாகர்கோயில். |
| 4 | 124 | M. K. அருணாசலம், ஸெண்ட்ஜான் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 5 | 54 | C. இராமசாமி, ஸெண்ட்ஜோஸப் காலேஜ், திருச்சி. |
| 6 | 126 | I. பால் ஏசுதாஸன், ஸெண்ட்ஜான் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 7 | 50 | J. L. S. டயஸ், ஸெண்ட்ஜோஸப் காலேஜ், திருச்சி. |
| 8 | 114 | V. தோதாத்திரி, ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 9 | 121 | S. M. டயாஸ் ஷை ஷை |
| 10 | 48 | S. முடியப்பன், ஸெண்ட்ஜோஸப் காலேஜ், திருச்சி. |
| 11 | 143 | S. சரஸ்வதி, ஸாராடக்கர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 12 | 84 | K. N. தெய்வசிகாமணி, வூரீஸ் காலேஜ், வேலூர். |
| 13 | 56 | K. S. பாவாமீரா உசேன், ஸெண்ட்ஜோஸப் காலேஜ், திருச்சி. |
| 14 | 42 | U. K. பாலகிருஷ்ணன் ஷை ஷை |
| 15 | 61 | Y. R. இலக்குமணன், முனிசிபல் காலேஜ், சேலம். |
| 16 | 81 | G. ரங்காராமாநுஜம், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை. |
| 17 | 120 | S. ராபர்ட் மரியலூயிஸ், ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 18 | 49 | S. A. தங்கப்பிரகாசம், ஸெண்ட்ஜோஸப் காலேஜ், திருச்சி. |
| 19 | 79 | V. ராமையா, மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை. |
| 20 | 51 | A. விசுவநாதன், ஸெண்ட்ஜோஸப் காலேஜ், திருச்சி. |
| 21 | 36 | C. S. இராமசாமி, ஷை ஷை |
| 22 | 43 | M. அந்தோணிசாமி, ஷை ஷை |
| 23 | 46 | G. துரைராஜன், ஷை ஷை |

| | | |
|---|---|---|
| 24 | 63 | B. S. வரதராஜலு, முனிசிபல் காலேஜ், சேலம். |
| 25 | 109 | வில்விமுத்தையா (பெண்), Women's Xian College, சென்னை. |
| 26 | 125 | R. இராமசாமி, ஸெண்ட்ஜான் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 27 | 107 | M. C. கண்ணன், பச்சையப்பா காலேஜ், சென்னை. |
| 28 | 130 | M. பால் வெற்றிவேல், ஸெண்ட்ஜான் காலேஜ், பாளையங் கோட்டை. |
| 29 | 29 | A. ராமசாமி, மதுரைக் காலேஜ், மதுரை. |
| 30 | 83 | S. குமாரதேவன், ஊரீஸ் காலேஜ், வேலூர். |
| 31 | 96 | S. C. சுப்பிரமணியன், ஷெ ஷை |
| 32 | 32 | S. R. மேசியாதாசன், மதுரைக் காலேஜ், மதுரை. |
| 33 | 52 | G. ஆத்மநாதன், ஸெண்ட்ஜோஸப் காலேஜ், திருச்சி. |
| 34 | 53 | V. மகிமைதாஸ், ஷெ ஷை |
| 35 | 93 | N. B. ராமலிங்கம், ஊரீஸ் காலேஜ், வேலூர். |
| 36 | 115 | K. இராமஸ்வாமி, ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங் கோட்டை. |
| 37 | 116 | S. பவுல் சுந்தரராஜ் ஷெ ஷை |
| 38 | 122 | M. மதுரம்ஸ்ரீநிவாசகம், ஸெண்ட்ஜான் காலேஜ், பாளையங் கோட்டை. |
| 39 | 134 | V. பிச்சுமணிஞானசுந்தரம், ஷெ ஷை |
| 40 | 145 | D. யுனிஸிவி ஜெயமணி (பெண்), ஸராடக்கர் காலேஜ், பாளையங்கோட்டை. |

# மெற்றிக்குலேஷன் பரீக்ஷை.

## 1வது வகுப்பு.

1 676 S. சீதாராமன், ஹைஸ்கூல், பத்தமடை.
(முதற்பரிசு ரூபா 30. வெள்ளிப்பதக்கமும் மீத ரூபாயும்.)

2 590 A. M. ஜானகிராமன், ஹிந்து ஹைஸ்கூல், மதுராந்தகம்.
(இரண்டாவது பரிசு ரூ. 25.)

3 719 R. ஆறுமுகசாமி, பச்சையப்பா ஹைஸ்கூல், சிதம்பரம்.
(மூன்றுவது பரிசு ரூ. 20.)

4 680 S. மீனாக்ஷிசுந்தரம், ஹைஸ்கூல், பத்தமடை.
(நான்காவது பரிசு ரூபா 15)

5 705 P. D. ஜட்சன், A. V. ஜோஸப் ஹைஸ்கூல், இட்டமொழி.
(ஐந்தாவது பரிசு ரூபா 12.)

6 165 V. குருசாமி, ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.

7 726 P. நல்லபெருமாள், ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை.

8 628 N. பொன்னம்பலம், போப்மெமோரியல் ஹைஸ்கூல், சாயர்புரம்.

## 2-வது வகுப்பு.

1 624 S. பிரமநாயகம், கால்டுவெல் ஹைஸ்கூல், தூத்துக்குடி.

2 369 P. R. சீனிவாசன், ஸர். சிவஸ்வாமி ஐயர் ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி.

3 154 O. R. லட்சுமணமூர்த்தி, ஸௌராஷ்ட்ரா ஹைஸ்கூல், மதுரை.

4 460 R. கிருஷ்ணசாமி, ஹிந்து ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி.

5 275 V. T. பாலகிருஷ்ணன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.

6 363 S K. சுப்பையன், ஸெண்ட்பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

7 282 S R. பெருமாள், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.

8 300 G. K. பக்கிரிசாமி, டையமண்டு ஜுபிலி ஹைஸ்கூல், கோபிசெட்டி பாளையம்.

9 600 V. கண்ணப்பன், ஸெண்ட்ஜோஸப் ஹைஸ்கூல், செங்கற்பட்டு.

10 601 M. கனகசபாபதி, ஷை ஷை

| | | |
|---|---|---|
| 11 | 694 | K. A. நீலகண்டன், A. A. M. ஹைஸ்கூல், திண்டிவனம். |
| 21 | 720 | V. N. ரங்கநாதன், பச்சையப்பா ஹைஸ்கூல், சிதம்பரம். |
| 13 | 611 | M. பழனிவேலு, ஸெண்ட்கொலம்பா ஹைஸ்கூல், செங்கற்பட்டு. |
| 14 | 682 | S. ஷண்முகவேல், தீர்த்தபதி ஹைஸ்கூல், அம்பாசமுத்திரம். |
| 15 | 710 | K. S. சுப்பையா, ஹிந்து ஹைஸ்கூல், கோபாலசமுத்திரம். |
| 16 | 166 | S. வெங்கட்டராமன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம். |
| 17 | 168 | M. கோவிந்தன், ஷை ஷை |
| 18 | 190 | T. M. ஜெகதீசன், பொன்னையா ஹைஸ்கூல், பாலக்கரை, திருச்சி. |
| 19 | 556 | N. S. இராமசுவாமி, பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சீபுரம். |
| 20 | 276 | M. செங்கோட்டுவேலப்பன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு. |
| 21 | 512 | C. சீனிவாசன், சபாநாயகமுதலியார் ஹிந்து ஹைஸ்கூல், சீர்காழி. (Shiyali.) |
| 22 | 246 | V. ராமசாமி, முனிசிபல் ஹைஸ்கூல், சேலம். |
| 23 | 488 | P.M. வீரராகவன், ஸ்ரீராமகிருஷ்ணஸ்டேண்டுஹோம், மைலாப்பூர். |
| 24 | 277 | M. சுப்பிரமணியன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு. |
| 25 | 287 | A. சிதம்பரம், ஷை ஷை |
| 26 | 661 | N. கிருஷ்ணசாமி, ஹிந்துநாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி. |
| 27 | 303 | G. R. வெங்கடராமணன், டைமண்டு ஜூபிலி ஹைஸ்கூல், கோபிசெட்டிபாளையம். |
| 28 | 636 | A. பால்ராஜ், போப்மெமோரியல் ஹைஸ்கூல், சாயர்புரம். |
| 29 | 307 | M. சண்முகசுவாமி, முனிசிபல் ஹைஸ்கூல், கூடலூர். N. T. |
| 30 | 489 | E. S. அர்த்தநாரீசுவரன், ஸ்ரீராமகிருஷ்ண ஸ்டேண்டுஹோம், மைலாப்பூர். |
| 31 | 578 | K. ஆறுமுகவர்மன், Anderson High School, காஞ்சீபுரம். |
| 32 | 736 | P. S. ஜேம்ஸ் மாணிக்கவாசகம், ஸெண்ட் ஜான் காலேஜ் ஹைஸ்கூல், பாளையங்கோட்டை. |
| 33 | 224 | T. P. வானமாமலைப்பெருமாள், C. M. ஹைஸ்கூல், திருநெல்வேலி. |
| 34 | 677 | P. S. கோபாலன், ஹைஸ்கூல், பத்தமடை. |

| | | |
|---|---|---|
| 35 | 285 | S. R. பொன்னுசாமி, மஹாராஜன ஹைஸ்கூல், ஈரோடு. |
| 36 | 605 | A. அனந்தராமன், ஸெண்ட்ஜோஸப் ஹைஸ்கூல், செங்கற்பட்டு. |
| 37 | 610 | P. M. திருநாவுக்கரசு, ஸெண்ட் கொலம்பா ஹைஸ்கூல், செங்கற்பட்டு. |
| 38 | 204 | S. A. ஜோசப், பொன்னையா ஹைஸ்கூல், பாலக்கரை, திருச்சி. |
| 39 | 250 | C. V. அருணாசலம், முனிசிபல் ஹைஸ்கூல், சேலம். |
| 40 | 152 | N. P. பழநியப்பன், ஸௌராஷ்ட்ரா ஹைஸ்கூல், மதுரை. |
| 41 | 662 | S. நாகரத்தினம், ஹிந்துநாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி. |
| 42 | 691 | P. B. ஸ்ரீரங்கன், A. A. M. ஹைஸ்கூல், திண்டிவனம். |
| 43 | 631 | G. ஞானசிகாமணி, போப்மெமோரியல் ஹைஸ்கூல், சாயர்புரம். |
| 44 | 189 | T. P. அம்பலவாணன், பொன்னையா ஹைஸ்கூல், பாலக்கரை, திருச்சி. |
| 45 | 324 | S. கோவிந்தராஜுலு, மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை. |
| 46 | 737 | D. S. ஜியார்ஜ்முல்லர், ஸெண்ட்ஜான் காலேஜ் ஹைஸ்கூல், பாளையங்கோட்டை. |
| 47 | 226 | S. மஹாதேவன், போர்டு ஹைஸ்கூல், தென்காசி. |
| 48 | 248 | T. K. இராமசாமிப்பிள்ளை, முனிசிபல் ஹைஸ்கூல், சேலம். |
| 49 | 263 | M. ரங்கநாதன், கோகுலநாத் ஹிந்துமஹாராஜன ஹைஸ்கூல், சேலம். |
| 50 | 377 | A. R. நரஸிம்மன், போர்டு ஹைஸ்கூல், அய்யம்பேட்டை. |
| 51 | 312 | M. ஷண்முகம், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை. |
| 52 | 336 | M. நடராஜன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர். |
| 53 | 727 | R. முருகையா, ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 54 | 724 | M. V. கிருஷ்ணராவ், Muzharul Uloom High School, ஆம்பூர். |
| 55 | 452 | K. V. சாரங்கன், ஹிந்து ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி. |
| 56 | 667 | S. கனகசபாபதி, ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி. |
| 57 | 213 | N. கணபதி, C. M. ஹைஸ்கூல், திருநெல்வேலி. |
| 58 | 157 | T. R. நரஸிம்மாச்சாரி, ஸௌராஷ்ரா ஹைஸ்கூல், மதுரை. |

| | | |
|---|---|---|
| 59 | 577 | E. கிருஷ்ணமூர்த்தி, Anderson High School, காஞ்சீபுரம். |
| 60 | 639 | S. ராமாநுஜம், போப்மெமோரியல் ஹைஸ்கூல், சாயர்புரம். |
| 61 | 214 | R. பாலசுப்ரமண்யன். C. M. ஹைஸ்கூல், திருநெல்வேலி. |
| 62 | 366 | S. சேதுராமன், ஸெண்ட் பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர். |
| 63 | 399 | S. அண்ணாமலை, C. M. S. ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 64 | 467 | N. P. ராமாநுஜம், ஹிந்து ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி. |
| 65 | 681 | S. S. சைலப்பன், ஹைஸ்கூல், பத்தமடை. |
| 66 | 707 | M. கணபதி, A. V. ஜோஸப் ஹைஸ்கூல், இட்டமொழி. |
| 67 | 305 | T. பட்டாபிராமன், முனிசிபல் ஹைஸ்கூல், கூடலூர். N. T. |
| 68 | 704 | S. சுவாமியடியான், A. V. ஜோஸப் ஹைஸ்கூல், இட்டமொழி. |
| 69 | 407 | அப்துல் காதீம், மகந்து ஹைஸ்கூல், வேலூர். |
| 70 | 678 | M. K. M. பக்கீர்முகமது, ஹைஸ்கூல், பத்தமடை. |
| 71 | 390 | M N. இராமசாமி, ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 72 | 402 | D. கனகராஜ், C. M. S. ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 73 | 435 | V. S. செல்லப்பா ஐயங்கார், முனிசிபல் ஹைஸ்கூல், வாலாஜாபேட்டை. |
| 74 | 567 | T. சேஷாசலம், பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சீபுரம். |
| 75 | 664 | V. நடராஜன், ஹிந்துநாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி. |
| 76 | 761 | K. நாராயணன், ஸெண்ட்ஜான் காலேஜ் ஹைஸ்கூல், பாளையங்கோட்டை. |
| 77 | 148 | V. இராமஸ்வாமி, சேதுபதி ஹைஸ்கூல், மதுரை. |
| 78 | 167 | V. வெங்கடசுப்பிரமணியன், ராஜா ல்ஹைஸ்கூல், இராமநாதபுரம். |
| 79 | 286 | V. சிவராம கிருஷ்ணன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு. |
| 80 | 482 | K. G. தேவநாதன், ஸர். எம். ஸிடி. முத்தையாசெட்டியார் ஹைஸ்கூல், சென்னை. |
| 81 | 385 | N. சுப்பிரமணியன், ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 82 | 398 | T. சுப்பராயலு, C. M. S. ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 83 | 555 | T. V. வரதாசாரி, பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சீபுரம். |
| 84 | 604 | V. ஸ்ரீநிவாஸன், ஸெண்ட்ஜோஸப் ஹைஸ்கூல், செங்கற்பட்டு. |
| 85 | 730 | S. ஸேவியர், ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |

| | | |
|---|---|---|
| 86 | 227 | S. கிருஷ்ணன், போர்டு ஹைஸ்கூல், தென்காசி. |
| 87 | 353 | R. முத்துசாமி, கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர். |
| 88 | 721 | A. V. அருணாசலம், பச்சையப்பா ஹைஸ்கூல், சிதம்பரம். |
| 89 | 723 | M. V. ராகவேந்திரராவ், Muzharul Uloom High School, ஆம்பூர். |
| 90 | 490 | R. ஸ்ரீனிவாஸன், பச்சையப்பா காலேஜ், சென்னை. |
| 91 | 589 | N. P. கிருஷ்ணசாமி, ஹிந்து ஹைஸ்கூல், மதுராந்தகம். |
| 92 | 648 | V. ராமமூர்த்தி, D M. ஹைஸ்கூல், திருவண்ணாமலை. |
| 93 | 728 | J. T. ஜேசுவடியான் கர்டோசா, ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 94 | 155 | T. R. ஸ்ரீனிவாசன், ஸௌராஷ்ட்ரா ஹைஸ்கூல், மதுரை. |
| 95 | 348 | S. ராஜாராம் ராவ், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர். |
| 96 | 364 | T. B சுந்தர் ராவ், ஸெண்ட்பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர். |
| 97 | 409 | M. K. நடராஜன், மஹந்து ஹைஸ்கூல், வேலூர். |
| 98 | 612 | O. K. நடேசன், ஸெண்ட்கொலம்பா ஹைஸ்கூல், செங்கற்பட்டு. |
| 99 | 633 | A. துரைப்பாண்டியன், போப் மெமோரியல் ஹைஸ்கூல், சாயர்புரம். |
| 100 | 146 | S. ஸ்ரீனிவாசன், சேதுபதி ஹைஸ்கூல், மதுரை. |
| 101 | 365 | P. கல்யாணசுந்தரம், ஸெண்ட்பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர். |
| 102 | 433 | N. S. குருசாமி, போர்டுஹைஸ்கூல், ஆரணி. |
| 103 | 607 | V. S. சுந்தரம், ஸெண்ட்கொலம்பா ஹைஸ்கூல், செங்கற்பட்டு. |
| 104 | 695 | M. திருநாராயணன், A. V. ஜோசப் ஹைஸ்கூல், இட்டமொழி. |
| 105 | 729 | R. N. அப்துல் ஹமீது, ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 106 | 198 | V. இராஜப்பா, பொன்னையா ஹைஸ்கூல், பாலக்கரை, திருச்சி. |
| 107 | 330 | N. M. இராமநாதன், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை. |
| 108 | 333 | K. சுந்தரம், மிஷன் ஹைஸ்கூல், புதுக்கோட்டை. |
| 109 | 341 | V. சிவஞானம், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர். |
| 110 | 178 | V. தேவராவ், E. R. ஹைஸ்கூல், திருச்சி. |
| 111 | 180 | T. S. குப்புசாமி, ஷை ஷை |

| | | |
|---|---|---|
| 112 | 206 | L. பஞ்சாபகேசன், போர்டு ஹைஸ்கூல், குளித்தலை. |
| 113 | 557 | K. கிருஷ்ணசாமிமுதலி, பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சீபுரம். |
| 114 | 632 | N. கில்பர்ட் போப் மெமோரியல் ஹைஸ்கூல், சாயர்புரம். |
| 115 | 593 | K. வில்வநாதன், ஹிந்து ஹைஸ்கூல், மதுராந்தகம். |
| 116 | 230 | P. இராமையா, போர்டு ஹைஸ்கூல், தென்காசி. |
| 117 | 446 | P. S. கிருஷ்ணஸ்வாமி, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை. |
| 118 | 448 | N. முத்துக்குமாரசாமி, ஷை ஷை |
| 119 | 476 | A. P. ஜம்புலிங்கம், ஸர். எம். ஸிடி. முத்தைய செட்டியார் ஹைஸ்கூல், சென்னை. |
| 120 | 623 | V. கிருஷ்ணன், கால்டுவெல் ஹைஸ்கூல், தூத்துக்குடி. |
| 121 | 335 | V. பஞ்சநதம், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர். |
| 122 | 339 | M. இராமநாதன், ஷை ஷை |
| 123 | 665 | A. பால்துரை, ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி. |
| 124 | 451 | P. கண்ணன், ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை. |
| 125 | 459 | R. N. சங்கரன், ஹிந்து ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி. |
| 126 | 465 | K. S. சுந்தரேசன், ஷை ஷை |
| 127 | 615 | K. C. சக்கரபாணி, ஸெண்ட் கொலம்பா ஹைஸ்கூல், செங்கற்பட்டு. |
| 128 | 630 | V. சிவசாமி, போப் மெமோரியல் ஹைஸ்கூல், சாயர்புரம். |
| 129 | 697 | D. செல்லையா ஞானசிகாமணி, A. V. ஜோஸப் ஹைஸ்கூல், இட்டமொழி. |
| 130 | 699 | P. ரத்தினமணி, ஷை ஷை |
| 131 | 182 | T. வெங்கடராமன், E. R. ஹைஸ்கூல், திருச்சி. |
| 132 | 606 | C. V. பாலசுப்பிரமணியன், ஸெண்ட் கொலம்பா ஹைஸ்கூல், செங்கற்பட்டு. |
| 133 | 621 | T. N. சுப்பையா, கால்டுவெல் ஹைஸ்கூல், தூத்துக்குடி. |
| 134 | 635 | G. அமிர்தராஜ், போப் மெமோரியல் ஹைஸ்கூல், சாயர்புரம். |
| 135 | 671 | N. S. ராகவன், ஹைஸ்கூல், பத்தமடை. |

| | | |
|---|---|---|
| 136 | 683 | B. எல்லு சுப்பிரமணியன், A A.M. ஹைஸ்கூல், திண்டிவனம். |
| 137 | 169 | T. ஜெகநாதன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம். |
| 138 | 201 | G. பெரியாழ்வார், பொன்னையா ஹைஸ்கூல். பாலக்கரை, திருச்சி. |
| 139 | 334 | B. V. பங்காருசாமி, கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர். |
| 140 | 561 | C. பலராமன், பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சீபுரம். |
| 141 | 619 | S. இராமசேஷன், ஸெண்ட் கொலம்பா ஹைஸ்கூல், செங்கற்பட்டு. |
| 142 | 689 | B. ராமச்சந்திரன், A. A. M. ஹைஸ்கூல், திண்டிவனம். |
| 143 | 360 | G. சீனிவாஸராவ், ஸெண்ட்பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர். |
| 144 | 267 | K. P. பொன்னுசாமி, கோகுலநாத் ஹிந்து மஹாஜன ஹைஸ்கூல், சேலம். |
| 145 | 332 | K. ராஜா, மிஷன் ஹைஸ்கூல், புதுக்கோட்டை. |
| 146 | 384 | M. C. கிருஷ்ணன், ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 147 | 437 | N. கோபாலன், ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை. |
| 148 | 466 | P. J. விசுவநாதன், ஹிந்து ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி. |
| 149 | 576 | T. சின்னசாமி, Anderson High School, காஞ்சீபுரம். |
| 150 | 595 | V. இராஜகோபாலன், ஹிந்து ஹைஸ்கூல், மதுராந்தகம். |
| 151 | 222 | P. கணேசன், C. M. ஹைஸ்கூல், திருநெல்வேலி. |
| 152 | 732 | A. பீற்றர், ஸெண்ட் ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 153 | 150 | A. கோவிந்தராஜன், சேதுபதி ஹைஸ்கூல், மதுரை. |
| 154 | 438 | A. R முத்துசாமி, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை. |
| 155 | 594 | R. உமாபதி, ஹிந்து ஹைஸ்கூல், மதுராந்தகம். |
| 156 | 638 | N. இராமசாமி, போப் மெமோரியல் ஹைஸ்கூல், சாயர்புரம். |
| 157 | 757 | G. உவால்த்றர் (Waltor), ஸெண்ட்ஜான் காலேஜ் ஹைஸ்கூல், பாளையங்கோட்டை. |
| 158 | 207 | D. கதிர்வேலு, போர்டு ஹைஸ்கூல், குளித்தலை. |
| 159 | 421 | M. T. குப்புசாமி, போர்டு ஹைஸ்கூல், ஆரணி. |
| 160 | 470 | P. N. சிவகுமாரன், ஹிந்து ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி. |
| 161 | 568 | N. கணபதி, பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சீபுரம். |
| 162 | 731 | K. S. மிக்கேல் சேவியர் பர்னாந்திஸ், ஸெண்ட் ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |

163 280 P. அமிர்தலிங்கம், மஹாராஜன ஹைஸ்கூல், ஈரோடு.

164 474 A. கோபால்சாமி, ஸர். எம். ஸிடி. முத்தையா செட்டியார் ஹைஸ்கூல், சென்னை.

165 396 S. நாராயணசாமி, C. M. S. ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.

166 431 M. துளசி, போர்டு ஹைஸ்கூல், ஆரணி.

167 159 L. A. ராமமூர்த்தி, ஸௌராஷ்ட்ரா ஹைஸ்கூல், மதுரை.

168 171 V. முருகேசன், பிஷப்ஹீபர் ஹைஸ்கூல், திருச்சி.

169 376 T. K. கோபால்சாமி, போர்டு ஹைஸ்கூல், அய்யம்பேட்டை.

170 386 S ரங்கராமாநுஜம், ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.

171 690 D. பச்சையப்பன், A. A. M. ஹைஸ்கூல், திண்டிவனம்.

172 706 P. சௌந்திரபாண்டியன், A. V. ஜோஸப் ஹைஸ்கூல், இட்டமொழி.

173 202 J. அப்துல்சலாம், பொன்னையா ஹைஸ்கூல், பாலக்கரை, திருச்சி.

174 403 K. T. ராஜைபா, C. M. S. ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.

175 514 R. முத்துகிருஷ்ணன், லூதர்ன் மிஷன் ஹைஸ்கூல், சீர்காழி, (Shiyali)

176 185 P. V. பாலகிருஷ்ணன், E. R. ஹைஸ்கூல், திருச்சி.

177 195 V. ஞானப்பிரகாசம், பொன்னையா ஹைஸ்கூல், பாலக்கரை, திருச்சி.

178 196 R. M. மதுரநாயகம், ௸ ௸

179 400 R. திருவேங்கடம், C. M. S. ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.

180 405 M. வெங்கோபன், வூரீஸ் காலேஜ், வேலூர்.

181 481 K. சிவராஜன், ஸர். எம். ஸிடி. முத்தையா செட்டியார் ஹைஸ்கூல், சென்னை.

182 659 K. A. S. அண்ணாமலை, ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.

183 711 T. K. மீனாக்ஷிசுந்தரம், ஹிந்து ஹைஸ்கூல், கோபால சமுத்திரம்.

184 722 E. S. குஞ்சிதபாதம், பச்சையப்பா ஹைஸ்கூல், சிதம்பரம்.

185 734 G. ஞானமணி, ஸெண்ட் ஸேவியர் காலேஜ், பாளையங் கோட்டை,

| | | |
|---|---|---|
| 186 | 268 | C. ஜெயராமன், கோகுலநாத் ஹிந்து மஹாஜன ஹைஸ்கூல், சேலம். |
| 187 | 338 | V. சுப்பிரமணியன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர். |
| 188 | 397 | S. M. குமரேசன், C. M. S. ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 189 | 205 | P. கிருஷ்ணமூர்த்தி, பொன்னையா ஹைஸ்கூல், பாலக்கரை, திருச்சி. |
| 190 | 436 | G. A. அஜிததாஸ், போர்டு ஹைஸ்கூல், சித்தூர். |
| 191 | 660 | N. S. S. ஆரோக்கியசாமி, ஹிந்துநாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி. |
| 192 | 712 | V. K. முத்துசுவாமி, ஹிந்து ஹைஸ்கூல், கோபாலசமுத்திரம். |
| 193 | 244 | P. S. வெங்கட்ராம், முனிசிபல் ஹைஸ்கூல், சேலம். |
| 194 | 329 | V. கோபாலன், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை. |
| 195 | 337 | S. கிருஷ்ணசாமி, கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர். |
| 196 | 361 | M. இராமச்சந்திரன், ஸென்ட்பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர். |
| 197 | 381 | S. கோவிந்தன், ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 198 | 634 | K. லாடகுருசாமி, போப்மெமோரியல் ஹைஸ்கூல், சாயர்புரம். |
| 199 | 219 | A. சுடலைமுத்து, C. M. ஹைஸ்கூல், திருநெல்வேலி. |
| 200 | 254 | K. கனகசபாபதி, முனிசிபல் ஹைஸ்கூல், சேலம். |
| 201 | 259 | V. L. சாம்பசிவன், கோகுலநாத் ஹிந்து மஹாஜன ஹைஸ்கூல், சேலம். |
| 202 | 302 | K. வரதராஜன், டைமண்டு ஜூபிலி ஹைஸ்கூல், கோபிசெட்டிபாளையம். |
| 203 | 450 | V. ரவிசங்கர்தவே, ஹிந்துதியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை. |
| 204 | 587 | A. M. நடராஜன், ஹிந்துஹைஸ்கூல், மதுராந்தகம். |
| 205 | 629 | P. தங்கராஜ், போப்மெமோரியல் ஹைஸ்கூல், சாயர்புரம். |
| 206 | 669 | K. வெங்கிடாசலபதி, ஹிந்துநாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி. |
| 207 | 672 | B. காந்திமதிநாதன், ஹைஸ்கூல், பத்தமடை. |
| 208 | 156 | J. N. கிருஷ்ணன், ஸௌராஷ்ட்ரா ஹைஸ்கூல், மதுரை. |
| 209 | 289 | D. ஸ்ரீகண்டன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு. |

210 311 V. ராஜாராம், முனிசிபல் ஹைஸ்கூல், கூடலூர் N. T.

211 416 P. சேதுராமன், மஹாந்த ஹைஸ்கூல், வேலூர்.

212 733 A. குருஸ்பெர்னாந்து, ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங் கோட்டை.

213 272 S. மாரிசெட்டி, கோகுல்நாத் ஹிந்துமஹாஜன ஹைஸ்கூல், சேலம்.

214 368 P. S. வெங்கட்ராமன், ஸர்-சிவஸ்வாமி ஐயர் ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி.

215 415 A. K. சினிவாசன், மஹாந்த ஹைஸ்கூல், வேலூர்.

216 562 A. M. சேஷாத்திரி, பச்சையப்பன் ஹைஸ்கூல், காஞ்சீபுரம்.

217 598 V. நமசிவாயன், ஹிந்துஹைஸ்கூல், மதுராந்தகம்.

218 627 A. J. G. கண்ணையா, போப்மெமோரியல், ஹைஸ்கூல், சாயர்புரம்.

219 179 K. S. ஸ்ரீனிவாசன், E. R. ஹைஸ்கூல், திருச்சி.

220 199 P. ஆரோக்கியசாமி, பொன்னையா ஹைஸ்கூல், திருச்சி.

221 582 T. K. சினிவாசன், ஹிந்து ஹைஸ்கூல், மதுராந்தகம்.

222 674 S. ராமகிருஷ்ணன், ஹைஸ்கூல், பத்தமடை.

223 215 K. முத்தையா, C. M. ஹைஸ்கூல், திருநெல்வேலி.

224 359 A. தோமாஸ், ஸெண்ட்பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

225 443 P. இராமமூர்த்தி, ஹிந்துதியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை

226 484 A. ருத்திரமூர்த்தி, ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் ஹைஸ்கூல், தியாகராயநகர்.

227 513 M. ராஜாமணி, லூதர்ன்மிஷன் ஹைஸ்கூல், சீர்காழி(Shiyali.)

228 602 D. சாமிநாதன், ஸெண்ட்ஜோஸப் ஹைஸ்கூல், செங்கற்பட்டு.

229 663 M. நடராஜபிள்ளை, ஹிந்துநாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.

230 685 R. வெங்கடேசன், A. A. M. ஹைஸ்கூல், திண்டிவனம்.

231 186 T. N. சம்பந்தமூர்த்தி, E. R. ஹைஸ்கூல், திருச்சி.

232 284 P. B. ஆதிநாராயணன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.

233 295 A. பூர்ணன், டிெ டிை

234 356 T. R. ராமநாதன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

235 151 V. ஜயராமன், சேதுபதி ஹைஸ்கூல், மதுரை.
236 200 V. S. வேங்கடராமன், பொன்னையா ஹைஸ்கூல், பாலக்கரை, திருச்சி.
237 231 T. ராமசுப்ரமணியன், முனிசிபல் ஹைஸ்கூல், சேலம்.
238 270 K. கோபாலகிருஷ்ணமூர்த்தி, கோகுலநாத் ஹிந்துமஹாஜன ஹைஸ்கூல், சேலம்.
239 411 M. S. சினிவாசன், மஹர்ந்து ஹைஸ்கூல், வேலூர்.
240 440 K. ஸ்ரீநிவாஸன், ஹிந்துதியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை.
241 591 A. சந்தானம், ஹிந்து ஹைஸ்கூல், மதுராந்தகம்.
242 640 S. ஏசுவேல்பாக்கியஞானம், போப் மெமோரியல் ஹைஸ்கூல், சாயர்புரம்.
243 758 T. ராஜதுரை, ஸெண்ட்ஜான் காலேஜ் ஹைஸ்கூல், பாளையங் கோட்டை.
244 354 V. லோகையன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
245 693 V. செல்லப்பன், A. A. M. ஹைஸ்கூல், திண்டிவனம்.
246 191 M. அடைக்கலதாஸ் ஞானமுத்து, பொன்னையா ஹைஸ்கூல், பாலக்கரை, திருச்சி.
247 279 V. S. குழந்தைவேல், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.
248 309 N. குழந்தைவேலு, முனிசிபல் ஹைஸ்கூல், கூடலூர். N. T.
249 485 N. வரதராஜன், ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் ஹைஸ்கூல், தியாகராயநகர்.
250 725 P. R. லக்ஷ்மணன், Muzharul Uloom High School, ஆம்பூர்.
251 281 K. S. ராஜகோபாலன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.
252 432 M. நரசிம்மன், போர்டு ஹைஸ்கூல், ஆரணி.
253 358 E. S. வெங்கடேசன், ஸெண்ட் பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
254 425 M. D. லக்ஷ்மணன், போர்டு ஹைஸ்கூல், ஆரணி.
255 479 A. கிருஷ்ணமூர்த்தி, ஸர். எம். ஸிடி. முத்தைய செட்டியார் ஹைஸ்கூல், சென்னை.
256 522 S. வீரையன், பிண்டிலே ஹைஸ்கூல், மன்னார்குடி.
257 583 R. ராஜாபாதர், ஹிந்து ஹைஸ்கூல், மதுராந்தகம்.

| | | |
|---|---|---|
| 258 | 596 | R. சந்தரவரதன், ஹிந்து ஹைஸ்கூல், மதுராந்தகம். |
| 259 | 735 | P. C. P. சோமசுந்தரம், ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங் கோட்டை. |
| 260 | 742 | C. ஜார்ஜ், ஸெண்ட்ஜான் காலேஜ் ஹைஸ்கூல், பாளையங் கோட்டை. |
| 261 | 696 | S. K. ராஜமணி, A. V. ஜோஸப் ஹைஸ்கூல், இட்டமொழி. |
| 262 | 161 | N. நாராயணசாமி, போர்டு ஹைஸ்கூல், சோழவந்தான். |
| 263 | 221 | S. பேச்சியப்பன், C. M. ஹைஸ்கூல், திருநெல்வேலி. |
| 264 | 269 | T. M. செங்கோடன், கோகுலநாத் ஹிந்து மஹாஜன ஹைஸ்கூல், சேலம். |
| 265 | 434 | N. முனிசாமி, போர்டு ஹைஸ்கூல், ஆரணி. |
| 266 | 176 | G. R. லோகாச்சாரி, பிஷப் ஹீபர் ஹைஸ்கூல், திருச்சி. |

மதுரைத்தமிழ்ச்சங்கம்,                *R. Shanmuga Rajeswaran,*

1—8—37.                                    அக்கிராசனாதிபதி.

# தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் தாது ௵ பங்குனி௴ 23, 24, 25
(1937-ஆம் ௵ ஏப்ரல்௴ 5, 6, 7)-ஆம் தேதிகளில் நடத்திய
தனித்தமிழ்ப்பரீக்ஷைகளில் தேறிப் பரிசும்,
யோக்கியதாபத்திரமும் பெறும் மாணாக்கர்களின்
அபிதானபத்திரம்.

---

## பண்டிதபரீக்ஷை.

### 2-வதுவகுப்பு.

| தொடர்த்தெண். | ரிஜிஸ்டர் எண். | |
|---|---|---|
| 1 | 1 | அ. முத்துச்சாமி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை. |
| 2 | 9 | செ. துரைசிங்கம், முத்துத்தம்பி வித்தியாசாலை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். |
| 3 | 15 | சு. இராசையா, ௸ ௸ |
| 4 | 16 | செ. நடராசா, திருஞானசம்பந்த வித்தியாசாலை, வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம். |

---

## பாலபண்டிதபரீக்ஷை.

### 1-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 26 | சீ. நாராயணன், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை. (முதற்பரிசு ரூபா 70 பெறத்தக்க தங்கப்பதக்கம்.) |
| 2 | 30 | பீ. கந்தசாமி, மாணவன், சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டைஸ்டேட். (இரண்டாவது பரிசு ரூபா 50.) |

### 2-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 31 | க. இராமமூர்த்தி, மாணவன், ஸ்ரீகணேசர் செந்தமிழ்க் கலாசாலை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டைஸ்டேட். |
| 2 | 32 | மு. பழநியப்பன், மாணவன், சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டைஸ்டேட். |

---

## பிரவேசபரீக்ஷை.

### 2-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 40 | சு. இராமலிங்கம், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை |
| 2 | 43 | ச. பாலசுப்பிரமணியன், மாணவன், சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டைஸ்டேட். |
| 3 | 36 | வே. நாராயணசாமி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை. |
| 4 | 42 | வே. மு. கந்தசாமி, மாணவன், சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டைஸ்டேட். |
| 5 | 38 | கி. ஸ்ரீநிவாஸன், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை. |
| 6 | 39 | த. முகம்மது அப்துல்லா ஷை ஷை |
| 7 | 41 | வி. பெரியகருப்பன், விளாச்சேரி போஸ்டு, பசுமலை. |
| 8 | 37 | ம. இராமகிருஷ்ணன், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை. |
| 9 | 44 | மருதஞ்சிவகுருநாதன், தெற்குத்தெரு, நயினார்கோவில் போஸ்டு, (via.) பரமக்குடி. |

மதுரைத்தமிழ்ச்சங்கம், *R. Shanmuga Rajeswaran,*

13—7—37. அக்கிராசனாதிபதி.

சந்திரன்:—என்னை யாரும் எளிதில் தெரிந்துகொள்ளலாம். என்னம்பில் அடையாளம் இருக்கிறதே.

சுலோசனை:—அம்பை அவர்மேல் ஏன் விட்டுவிட்டுவந்தீர்? எடுத்துவரக்கூடாதா?

சந்திரன்:—அம்பைப் பிடுங்கியெடுப்பின், குருதி குமிழியிட்டுப் பெருக அவன் உடனே இறப்பன். அங்ஙனம் அவன் இறப்பதினும் யான் இறப்பதே மேலென்று வந்தேன். எப்படியும் அரசன் என்னைத் தன்புதல்வனைக் கொல்லநினைத்த பாவியாயெண்ணிப் பகைப்பன். அரசனைப் பகைத்துக்கொண்ட குடி அந்நாட்டில் உயிர் வாழ்தல் முடியுமா? ஆதலால் யான் போகவேவேண்டும்.

சுலோசனை:—என்னன்பினுக் கரசே! நீர் இவ்விடம்விட்டுச் செல்லுவதானால் நானும் உம்முடன்வருவதில் உமக்கொன்றும் கஷ்டமில்லையே. காடோ மலையோ நாடோ தொலையோ எவ்விடத்திலும் நான் உம்பக்கத்திலிருந்து உமக்கிதமானவற்றைச் செய்துவருவேன். மனமும் உயிரும் உம்மைப் பின்றொடர்ந்துவர வெற்றுடல் இங்கே கிடந்து மிக வருந்தித் தவிக்கும். அதையும் அழைத்துக் கொண்டுபோகலாமே.

சந்திரன்:—பேதாய்! நீ ஆராயாது பேசுகிறாய். மணமாகாத நீ ஒரு புருஷனைத் தொடர்ந்துசெல்லற் குரியையல்லை. மேலும், நீ என்னோடுவரின் ஒவ்வோரிடத்திலும் நம்மைப்பற்றி யார்? எவர்? என்று விசாரணைநிகழும். நான் தனியே செல்லின் யாரோ தனிவழிப்போக்கனென்று கவனியாது விட்டுவிடுவர். நீ உன் அருமைத் தமயனும் என் உயிர்நண்பனுமான சாகரன் பாதுகாப்பில் இருந்துவா.

சுலோசனை:—நீங்கள் செல்லும் நாடு இன்னதென்று தீர்மானித்துவிட்டீர்களா? அந்நாட்டரசன் வலியுடையனாயிருத்தல் வேண்டுமே? இல்லையெனின் உங்களைத் திருப்பித்தரும்படிகேட்டு அவன்மேல் மகதன் போர்தொடங்குவானே.

சந்திரன்:—யான் அடையும் நாட்டை உனக்குத் தெரிவித்தால் நீ எப்படியாவது அங்கே வரத்தலைப்படுவாயாதலின் யான் செல்லும் நாட்டிற் சேர்த்தியடையின் உனக்குத் தூதனுப்பித் தெரிவிப்பேன்.

சுலோசனை:—ஆண்பிள்ளைகள் மனவுறுதியுடையோர்; தாமரை யிலையில் நீர்போல் அவர்மனம் ஒன்றினும் பற்றிலாது நிற்கும். பெண்கள்மனமோ அங்ஙனமில்லை; நீரிற் சருக்கரையைப்போல அன்புபொருந்திய இடத்தில் தன்குணம் மாறி அப்பொருளின் குணத்தையேயடைந்து கரைந்துவிடும். நீர் உலகிலுள்ள பலரி னும் மேம்பட்ட கீர்த்தியும் சீர்த்தியும் பெறமுயன்று அம்முயற்சி யில் என்னை அடியோடு மறந்துவிடவுங்கூடும். பெண்ணாகிய எனக்கு இரவும் பகலும் உம்மை உன்னியுன்னி அகம் கரைந்து உடல்வாடுவதைத்தவிர வேறு யாதொருவிசாரமும் இல்லையே. இளையளாகிய என்னை இங்ஙனம் விட்டுவிட்டு என் மனத்தையும் உயிரையும் உடன்கொண்டு நீர் வேறுதேசம் சென்றுவிட்டால், நீர் தூதனுப்பி என்னை அழைத்துக்கொள்ளும்வரை நான் உயிர்வாழ முடியுமா? மேலும் பருவமடைந்த பெண்கள் வெகுநாள் மண மின்றியிருப்பிற் பலரும் ஏசுதற்கிடமாகுமே. இதையெல்லாம் சற் றும் உன்னாது, 'நீ இரு, நான் போய்வருகிறேன்' என்று மிகவும் எளிதாய்ச்சொல்லிவிட்டீர்களே.

சந்திரன்:—என் மனமறிந்தொழுகும் மாண்புடை மணியே! யான் உன்னை மறந்துவிடுவேனென்றும் உன்மனத்தில் தோன்ற நான் என்னபாவஞ்செய்தேனோ? மாதர்துயரம் மனத்தடங்கா தெழுந்து சிதைந்தழியும். ஆடவர்க்கோவென்றால் அடிநெஞ்சில் அழுந்திக்கிடந்து ஆறாத்துன்பஞ்செய்யும். இன்றுதொட் டீராண்டு மட்டும் என்னை எதிர்பார்த்திரு. அதற்குள் யான் செய்தியனுப்பா விடில் அதன்பின் நீ என்னைப் பார்க்கமுடியாதென்று முடிவு செய்துகொள்.

சுலோசனை:—என் சித்தத்திற்கேற்ற ரத்தினமே! இரண் டாண்டுகாறும் என் உடலைப் பேணல் இயலாது. ஓராண்டுமட்டு மே உம்மைநினைந் துருகுவேன். என் வழிபடுகடவுளை இரவும் பக லும் பூவாலும் தளிராலும் பூசித்து உமக்கு வெற்றியும் நன்மையும் தரும்படி வேண்டுவேன். அவ்வோராண்டு சென்றும் உம்மைப் பற்றி அறியாதிருப்பின் உடனே உயிர்மாய்ப்பன். இது திண்ணம். [சாகரன் வர] அதோ என் தமயன் வருகிறான்.

சந்திரன்:—ஏதோ நம் நற்றவப்பயனால் உற்றவிடத்திலுதவு தற்கு என் நண்பன் வந்தனன். நண்ப! என் அவசரம் இன்ன தென்று உனக்குத் தெரியுமா?

சாகரன்:—நன்ருய்த் தெரியும். அரசிளங்குமாரனுக்கு இனிச் சற்றும் பயமில்லை. உன்னைப்பற்றி அரசன் மிகவும் கடுமையாய் விசாரித்தனனும். நீ இனிச் சிறிதும் இங்குத் தாமதியாமல் தலை மறைவாயிருப்பது நன்று.

சந்திரன்:—அங்ஙனம் செல்லும்பொருட்டே யான் உன்னிடம் விடைபெறவந்தேன். சுலோசனையைக் கண்டு கேட்டுக்கொண் டிருந்தேன். [இருவரையும் நோக்கி] எனக்கு விடையளிப்பீராக.

சாகரன்:—உன்பேரும் முத்திரையும் நம்நாடுமுழுதும் அனுப் பப்பட்டுள்ளன. நீ எங்கிருந்தாலும் பிடித்துக்கொண்டுவரும்படி அரசன் கட்டளையிட்டிருக்கிறுன். ஆகலின் நீ உன் அடையாளம் பதித்த வில்லையும் உன் அம்புக்கூட்டையும் என்னிடம் வைத்து என்னுடையவைகளைக் கைக்கொண்டுசெல். யான் அவைகளை ஒளித்துவைப்பேன். என் ஆருயிர் நண்ப! உனக்கு எல்லாநன்மைக ளும் உண்டாகுக. நீ சென்றவிடத்திற் செல்வமும் சீர்த்தியும் பெற்று எம் மனங்குளிர மாண்படைவாயாக.

சந்திரன்:—பெண்ணே! நான் போய்வருகிறேன்.

சுலோசனை:—ஆகா. என் தமயனுக்கு உம்மைப்போன்ற சிநேகிதர் இனி ஒருவரும் கிடைக்கமாட்டார்கள். அவர்தங்கை யை மறந்தாலும் அவரை எந்நாளும் மறவாதிருப்பீராக.

சாகரன்:—[அழுதுகொண்டு] நண்ப! சென்றுவா. நீ வேறு நாட்டிற்போய் என்னை மறந்துவிடினும் யானும் இந்நகரும் உள்ள வரை நாமிருவரும் இணைபிரியாதிருந்ததை யான் மறவேன். இனி உன்னை மறுபடிகாணும் நாளே நன்னளாகும். காலக்கழிவு செய்யாதே.

[சந்திரன் போதல்.]

சுலோசனை:—அண்ணா! உமக்கு மிகவும் அருமையான நண்பரோடு நீரும் ஏன் போகக்கூடாதோ? அவர் தனியேசென்று வருந்துவதினும் நீரும் அவருக்கு உதவியாய்ச்சென்று அவர் நம் நாட்டெல்லை தாண்டினவுடன் நீர் திரும்பிவிடலாமே?

சாகரன்:—குழந்தாய்! நம் நாட்டெல்லை நான்குதிசைகளிலும் ஐம்பதுயோசனைகள் உள்ளன. அவரை வழிவிட்டுத் திரும்பக் குறைந்தது நான்குமாதங்களாகுமே? நீ பருவமடைந்திருத்தலின் உன்னைத் தனியேவிட்டுச்செல்லல் முறையன்று.

சுலோசனை:—நானும் உடன்வருகிறேன்; நாடுகாண்செலவு (—தேசசஞ்சாரம்) மிகவுஞ்சிறந்ததென்று பெரியோர் கூறுவரன்றோ?

சாகரன்:—ஆம். ஆயின் அதற்கு இது காலமன்று. மணந்த பிறகு கணவனோடுசெல்லுதல் முறையாகும்.

சுலோசனை:—[கண்களில் நீர்ததும்ப வாய்குழறி] எனக்கு மணமே வேண்டாம். இன்னும் சிலநாள் உயிர் உடலில் தரிக்கட்டும். பிறகு பார்த்துக்கொள்ளுவோம். [போதல்.]

சாகரன்:—ஆகா! இவள் கண்களில் நீர்ததும்பியது, நாடுகாண் செலவு (—தேசசஞ்சாரம்) இவளுக்கு இயையாதென்றதனாலா? இவள் மணமே வேண்டாமெனும்படிக்கும் உயிர்தரித்தலுக்கிடையூறாகவும் இப்பொழுது என்னநேர்ந்தது? இவர்களுக்குள் மிக்கிருக்கும் உள்ளன்பை யான் இதுவரை அறிந்திலேன். எல்லாவற்றிற்கும் தெய்வமொன்றிருக்கிறது. அது விட்டவழி விடுகிறது. [போதல்.]

---

## அங்கம்-I.

### களம்—4.

---

இடம்:—பாடலீபுரத்தின் பக்கத்தில் ஒரு குடிசை.

பாத்திரங்கள்:—சாணக்கியனும் சந்திரனும்.

சாணக்கியன்:—[ஒரு காய்ந்தபுல்லைக் கையிலெடுத்து நெருப்பைக் கொளுத்தி எரித்துக் குவளைத்தண்ணீரிற் கரைத்துக்கொண்டு] 'பகை கடிதல்' என்றால் நமக்கு எவ்வகைத்துன்பமும் விளைவிக்கக்கூடிய

எப்பொருளும் உலகில் இல்லாமற்செய்தலாம். படைப்பிலுள்ள பொருள்கள் ஒன்றற்கொன்று முரண்பட்டுநிற்கின்றனவா? உதவியாயிருக்கின்றனவா? இந்தத் தத்துவம் மனவுணர்ச்சியைப் பொறுத்தது. அன்புசெய்யுமிடத்துப் பகைவிளையாது. பகைவிளையுமிடத்தும் அன்புசெய்யலாகாது. ஆனால் பகையென்பது ஒருபடைப்பமைதியாகுமா? அதற்கு உலகநடையிலும் ஓரிடமுண்டா? எப்படி? எதற்காக? என்னும் விஷயங்கள் பல்பெருங்கலைகளிற் கண்டறியக்கிடக்கின்றன. அருள்வடிவாகிய கடவுளுக்கும் இரக்கம் குடிகொண்டிருக்கும் முனிவருக்கும் அசுரரும் அரக்கரும் பகைவராவார்களானால் படைப்பின் தத்துவத்தில் பகைக்கு மிகவும் சிறந்ததோரிடமும் பயனும் இருக்கவேண்டுமல்லவா? ஆனால் அதன் விளைவுமட்டும் பலபடியாயுள்ளது. அது தீங்கேயன்றி நன்மை விளைப்பதில்லையென்பர்; ஆனால் தீங்குக்கும் தீங்கு விளைக்குமாதலால் நன்மை எஞ்சச்செய்யும். உடன்கடிந்தழியாப் பகை தொடர்ந்தெழுந்தொறுக்குந் தகைமைத்தன்றோ? ஆதலின் அது நேர்ந்தவிடத்து நிலையழியக்கடவது. என் காலில் இடறிய புல்லைச் சுட்டுக் கரைத்துக் குடித்தலன்றி அது எனக்கியற்றிய இடர்க்கு மாறு வேறில்லை; அதை வேரோடு கெடுத்தல் விதியேயாகும்.

சந்திரன்:—[வந்து வணங்கிநின்று நமோ குரவே நமோநம:] குருநாதரே! வணங்குகிறேன்.

சாணக்கியர்:—தீர்க்காயுஷ்மான்பவ! ஜயவிஜயீபவ! சந்திர! என்ன இவ்வளவு பதற்றம்? என்ன அவஸரம்?

சந்திரன்:—யான் அயல்நாடுகாணச் செல்லுகிறேன். தங்கள் செய்ய பங்கயப்பதங்களைச் சென்னியில் தாங்கிச் செல்ல வந்தேன். விடைதந்தருளவேண்டும்.

சாணக்கியர்:—என்ன? சட்டென்று நினைத்துக்கொண்டாய். எப்பொழுதும் வீரனாகிய நீ உலகையறியச் செல்லவேண்டியதுதான். ஆனாலும் இப்பொழுதே புறப்படுவானேன்?

சந்திரன்:—என் அவசரத்தைச் சாகரன் சொல்வான். எனக்குச் சென்றுவர விடையருளுங்கள். எனக்கு வில்லும் மல்லும் பயிற்றுவித்த ஆசிரியர்பெருமானாகிய நிர்மலகுப்தரவர்களிடம் விடைபெறப் பொழுதில்லையாதலின் அவருக்காகவும் தாங்கள் விடையளித்து அருள்புரியவேணும்.

சாணக்கியர்:—சென்றவிடமெல்லாம் சிறப்பெய்திச் செல்வர் சிகாமணியாய் விளங்க, உனக்கு ஈசன் அருள்புரிவான். எத்துறையிலும் அறத்தைக் கைவிடாதே. அது உன்னை எப்பொழுதும் காப்பாற்றும்.

[சந்திரன் செல்லுதல்.]

---

## அங்கம் - II.

### களம் - 1.

---

இடம்:—சாகரன் மாளிகையில் ஓரறை.

பாத்திரங்கள்:—சாகரன், சுலோசனை, யமுனை.

[சுலோசனை, வாடினமுகத்துடன் கன்னத்திலும் தலையிலும் கை வைத்துக்கொண்டிருக்க,]

சாகரன்:—தங்காய்! சென்ற ஒருமாதகாலமாக நாடோறும் உன்னுடல் வாடி முகத்தின்களை மறைய நீ வருந்துவானேன்?

சுலோசனை:—அண்ணா! ஏதோ ஒரு தலைவலியும் சுரநோயும் என்னைப்பற்றி வருத்துகின்றனவென்று மருத்துவருரைத்து மருந்து உதவுகின்றார்களே. அம்மருந்திற் சற்றுக் குணந்தான்.

சாகரன்:—மருந்திற் சற்றும் குணமென்று எனக்குத் தோற்றவில்லையே? அதிருக்கட்டும். நீ அடிக்கடி கண்ணீர்வார்த்துத் துக்கிக்கக் கண்டிருக்கிறேன். உடலில் நகையணியாமலும் நல்லுடையுடுத்தாமலும் குழலைவாரிப் பின்னிக்கொள்ளாமலும் முகத்திற் பொட்டிடாமலும் முப்பதுநாட்கள் கழித்திருக்கின்றாய். முறுவலும் நகையும் முழுதும் மறந்தனை. இதெல்லாம் எதன் பொருட்டு?

சுலோசனை:—அண்ணு! நான் உமக்குச் சொல்லவேண்டுமா? உடல் நல்லநிலைமையிலிருந்தாலன்றே உள்ளத்திற் களிப்பும் உடலை அழகுபண்ணிக்கொள்ள ஆசையும் முகத்தில் நகையும் ஒளியும் இருக்கும். உடம்பு பிணியால் வருத்தப்பட்டால் மனமும் குழைந்து வருந்துமன்றே?

சாகரன்:—ஆம். நீ சொல்வது உண்மைதான். ஆயினும், உன்னிடத்தில்மட்டும் முதலில் உள்ளத்தைப்பற்றிய பிணிதான் பின்னர் உடலைத்தாக்கி ஊறுசெய்கிறதென்று எண்ணவேண்டியதாயிருக்கிறது. உடலைப்பிடித்துப் பின் மனத்தைத்தாக்கும் பிணியை மருத்துவருதவியால் விலக்கலாம். மற்றொருபிணியோ அங்ஙனம் விலகாது. உன்மட்டில் மருத்துவர்சிகாமணியான பாண்டுரங்க யோகியின்முயற்சியும் பயனற்றுப்போயிற்று. உன்முகத்திற் சற்றும் தீக்குறியின்மையால் பேய்க்குணமென்போர் பேச்சும் பொய்யாகும். ஆதலின் உன் மனநோயே உன்னை யிங்ஙனம் வருத்துகிறது. தெய்வவழிபாடும் துதியும் பூசையும் மிக்கியற்றலின் நீ ஏதோ ஒரு நன்முடிவைக்கருதி மனம்வருந்திக் கடவுளைவழிபடுகிருயென்பது திண்ணம். என்மனத்திலுள்ளதை இயம்பவா?

சுலோசனை:—அண்ணு! கல்வியறிவுகளான் மிக்க தாங்கள் பேதையாகிய என்னைச் சோதிக்கலாமா? உங்கள் மனத்திலுள்ளது எதுவாயிருப்பினும் யான் அதைக் கேட்கவிரும்பவில்லை. யான் சொல்வதை நீர் நம்பாவிடின் அதுவும் என் காலக்கொடுமையே.

சாகரன்:—என் உயிர்நண்பனுன சந்திரன் இவ்விடம் விட்டுச் சென்றுவிட்டது என் காலக்கொடுமையன்றே?

[சுலோசனை மூர்ச்சித்துக் கண்ணீர்பெருக விழல்.]

யமுனை:—[உள்ளேநுழைந்து சாகரன் திகைக்க] சாகரரே! இன்று நல்லசமயத்தில் வந்தேன். உமது நண்பன் எங்கேசென்றிருக்கிருன்? இவ்வளவுநாளாக யான் அலைந்துகேட்டும் நீர் எங்கே சென்ருனே தெரியாதென்றுசொல்லிவிட்டீரே.

சாகரன்:—அம்மணீ! உம் அருமைப்புதல்வனை சந்திரன் பிரிவாற்ருது நீர் மிகவும் வருந்தி உயிர்மாய்ப்பீரென்று நான் இது காறும் உம்மிடம் உரையாதிருந்தேன். இனி ஒளிப்பது தகுதியன்று. சீக்கிரத்தில் திரும்பிவருவதாகச் சொல்லிப் போயிருக்கிருன்.

யமுனை:—என்னிடத்தில் விடைபெற்றுக் காட்டுக்கு வேட்டையாடப்போனவன் முப்பதுநாட்களாகியும் வரவில்லையே. உம்மைக்கேட்பின் போன இடம் தெரியாதென்று இவ்வளவு நாளாய்ச் சொல்லிவந்தீர். இப்பொழுது சீக்கிரம் வந்துவிடுவானென்று சொல்லுகிறீரே! சீக்கிரம் வரும்படியான இடத்திற்குச் சென்றிருப்பின் திரும்ப இவ்வளவுநாள் ஆவானேன்? பேதையாகிய என்னை இங்ஙனம் வருத்துவது உமக்குத் தருமமாகுமா?

சாகரன்:—நீர் சந்திரனைப்பற்றிப் படுங் கவலை எனக்கு மிகவும் ஆச்சரியத்தையுண்டாக்குகிறது. இருபத்திரண்டுவயதுடைய கட்டிளைஞனுய்க் கல்விகேள்விகளிற் சிறந்து, வில் முதலிய படைகளிற் பயின்று, தேர்முதலான ஊர்திகளைச் செலுத்திப் பொருவதில் வல்லோனுய்த் தோள்வலிமிகுந்து அஞ்சாத நெஞ்சுடையனுய் அனைத்துலகுமடக்கும் ஆற்றலுடையனுய் உள்ள சந்திரனைப்பற்றி இவ்வுலகில் ஒருவருமே வருந்தவேண்டியதில்லையே. வில்லினும் மல்லினும் அவனை வெல்லவல்லோர் இவ்வுலகில் ஒருவருமில்லை. ஆயினும், பெற்றுவளர்த்த தாயாதலின் உம்முடைய மனம் தவிப்பது இயற்கையே. அறிவின்மிக்க உமக்கு நான் அதிகம் சொல்ல வேண்டா.

யமுனை:—சந்திரனைப் பிரிந்து என்கண்களிற் காணுதிருத்தலின் மனம் வருந்துவதைத்தவிர வேறு அவன் க்ஷேமத்தைக் குறித்துச் சற்றேனும் என்மனத்தில் ஐயமில்லை. அரசர் அரண்மனையில் ஐம்பதுவருஷத்துக்குமேல் சேவகஞ்செய்து வெற்றியினும் வீரச்செயல்களினுமே களிப்புற்று ஆண்மையும் தீரமும் திரண்டோருருவாய்ப்பிறந்து ஐந்தாண்டுநிறைவதற்குமுன்னமே அம்புக்கூடும் வில்லுமாய்க் கிளம்பித் தோட்டஞ்சுற்றித் துகளெழவோடி வேட்டங்தேடும் விறலிளங்குமரர் பலரை வளர்த்தெடுத்த எனக்கு

தருபொருட் டினில்வந் துறுநவ நிதியுந்
தமனியத் திருவுமுத் தமிழுந்
தொகுகவிப் புலமை வளமையு மதனுட்
சொற்றவைக் கெதிரன புகாத. (கஅ)

2054 அரவின்மா மகுடங் குறுகநீள் பிலம்புக்
ககழ்ந்துகீழ் மடைப்படுத் தகிலப்
புரவுபூண் டிகிரி வரையினைத் துளைத்தப்
புறக்கடல் கொணர்ந்துபூ ரித்த
திரவிமாண் பரிதி யெழிலிமுற் றியதா
மெனத்தம னியமதில் வளைத்த
வுரவுநீர்த் தரங்க வொலிகிளர் கிடங்கி
னுயர்வினி யுரைக்கநின் றுளதே. (கக)

2055 கொம்மைவெம் முலையார் விழியெனக் கொடுங்கோற்
கூற்றெனக் கோதிலா முனிவர்
தம்மையுந் தெறுமைம் புலனெனப் பசியாற்
றளர்ந்துபுன் பலியிரந் தவரை
வம்மென மனைபுக் கில்லவண் மறுப்பான்
மனைப்புறம் போமென வழங்கா
வெம்மனம் படைத்தோ னுரையெனக் கொலையின்
விறல்புரி சிஞ்சுமா ரத்த. (உ0)

2056 மூதறி வுடைநன் புதல்வரைப் பயந்த
முதுகுடிப் பிறந்துளார் ஞான
மேதக வுடைய புதல்வர்ஞா னமதே
மேற்படக் கீழ்ப்படல் பொருவுந்
தாதளை வதற்குப் பெடையொடுஞ் சுரும்பு
தளையவிழ் சததளத் தவளச்
சீதளக் கமல மலர்துவன் றுளதாற்
றெண்புனன் மறைந்துள செயலே. (உக)

2057 ஒளிருமா மணியுங் கனகமு மகழி
னுட்டுவன் றருகணை பவர்க்கங்
கெளிதினிற் கோடற் கரியவா யுள்புக்
கெடுப்பவர்க் கெளியவா நிலைதான்

வெளிறிலாப் புலவர் பனுவலுட் கொண்ட
விழுமிய பொருள்வெளி றுடையோர்
தெளிவுறற் கரிதாய் நுழையுணர் வினருட்
டெளிவெளி [1]துறநிலை தெருட்டும். (உஉ)

2058 தெள்ளறன் மருங்கிற் றவழ்வளை யுயிர்த்த
திகழ்நிலாக் கொழுங்கெறி மணியும்
வள்ளிதழ்க் கமலப் பனிமல ருகுத்த
மாசிலாத் தாளமுந் தினமுங்
கொள்ளைவெண் டிரைமொண் டெறிதரக் கரையிற்
குவைகுலாய் நிவந்துகூற் றுதைத்தோன்
வெள்ளிமால் வரைதெண் டிரைக்கடல் வளைத்த
மேதக வெனப்பொரு வருமே. (உங)

2059 கிடங்குசூழ்ந் தறலுட் டுறுபடைப் பொருநர்
கிளைத்திகல் விளைப்பதொன் றிலையாற்
கடங்கவிழ் கரடத் தழலுமிழ் தறுகட்
களிற்றெடுங் களிறிக லுவபோன்
றிடங்கரொ டிடங்கர் மலைவகோட் சுறவி
னினத்தொடு மலைவகோட் சுறவ
மடங்கல்போற் சினஞ்செய் திமிங்கில கிலத்தின்
மலைவதூஉந் திமிங்கில கிலமே. (உச)

2060 பூங்கொடி யொடுமொய் வனமரீஇக் கருவி
புறம்புறு வகையகத் தடக்கி
யோங்கிய முதலைக் கணமுநீப் பிலவா
யோகமே தழைந்திடு முயர்வாற்
றுங்கரும் புளக மலர்ந்துகண் ணீர்க
டதும்பிநீ டளியுறுந் தகைத்தால்
வீங்குநீ ரகழு மருணெறி தழைந்த
வேதமா தவர்ப்பொரு வருமே. (உரு)

[பி-ம்.] [1] தெளிவுநிலை. சா.

2061 கனகமா மதிளின் சுடர்கரை யிகந்து
கதுவலா லகழிமாண் கரைமண்
கனகமா மிதெனக் கவினுறுத் துதலுங்
கயல்விழித் துவரிதழ் மடவார்
கனகமால் வரைத்தென் புலத்துவெண் ணாவற்
கனியினா லாயகா மருசீர்க்
கனகமா னதனைத் திரட்டுவார் களில்லை
கலுந்திரட் டுவர்கரங் களினே. (௨௬)

2062 பொருவிலா டவர்தா நீர்விளை யாடப்
புணர்த்தநா வாயிடைச் செறித்த
கருமுகிற் படல முரிஞ்சுபாய் மரத்திற்
கால்கொளச் செறித்தகா ழகப்பா
யிருபுறத் துளபொன் மதிளிர வியுநித்
திலத்தின்வெண் ணிலவுமே கதுவா
வொருபுறம் பீதாம் பரத்தொளி தரமற்
றொருபுறம் வெண்படாத் தொளிரும். (௨௭)

2063 உரனுடைக் குரவ னுணர்வுமன் னுயிர்கட்
குறுதுணைக் காவல்பூண் டதனைப்
பரனுடை யருணின் றிடைவிடா தளித்தாய்ப்
பயின்றதோர் காவலைப் பொருவும்
வரனுடை நகரிற் குறுதுணைக் காவல்
வாய்ந்தபொன் மதிளினை வளைக்குந்
திரனுடைத் தாகி யளப்பதற் கரிதாய்த்
தெளிந்தகன் றாழ்ந்தநீர் நிலையே. (௨௮)

வேறு.

2064 மெய்ப்பானு வொருதிகிரி யெழுபரித்தே
ரொடுந்தினமும் விண்ணு லாய
வெய்ப்பாறு மெயில்வளைக்குந் திருநகரின்
புறத்தெயிலின் வெயிலா லுட்கிப்
பொய்ப்பான்மை யிருள்புறம்புக் கொளித்திட்டே
தழைத்தடர்பூம் பொதும்பர் சூழ்ந்த
வைப்பாகு மருதவளந் தனையினிமேற்
புகழ்வதற்கு மனதுற் றேனே. (௨௯)

2065 தாதவிழ்மென் மலர்வகுளஞ் சண்பகஙன்
பலவரம்பை தண்ணங் தேமாப்
போதவிழ்சங் தனமகில்பைங் கமுகொடுகுங்
குமப்பொழிலே புறத்த தாக
மாதுளமல் லிகைதளவம் வலம்புரிசெவ்
வந்திநடு மயிலை வேலி
மேதகுபன் மலர்த்தடம்வெள் ளிடையிலவா
மெவ்வுழியும் விளையுண் மன்னோ. (௩0)

2066 சூலாறுங் கருமேகப் புனலாறும்
பொதும்பரிற்பூங் துணர்கள் செங்தேன்
காலாறுங் கழுநீருண் கருமேதி
கன்றுள்ளிக் கவிழ்த்த கொள்ளைப்
பாலாறுங் கரும்புடைப்பா ராலைதொறு
மதன்பானம் பரங்த வாறு
நாலாறும் வீற்றுவீற் றெழுங்துவிரா
யொருநதியாய் நடப்ப தோன்றே. (௩க)

2067 தொன்மரபிற் பிறங்தவர்பா னல்வினையாற்
சுரங்தபொருள் சுடர்சேர் ஞான
நன்மரபிற் குரியவர்தம் மிடங்தேடிப்
புகுவனபோ னதிகொ ணன்னீர்
கன்மதகு படநீக்க வுரகன்முடி
யெனக்கவர்பல் காலி னேடி
யின்மரபுக் குரியவர்தா மியற்றியதண்
கழனிதொறு மெய்து மாதோ. (௩௨)

2068 முப்பாலுங் தமதமவாம் வயின்வயின்வங்
துறைவதற்கு முசிவொன் றில்லா
தப்பாலுங் கழனிதொறும் பகடுரப்பி
யுழுமள்ள ரலம்போழ்ங் தோடு
மெய்ப்பாரி னிடைபொடித்த முழுமணியால்
வளையுகுத்த விழுநீர் முத்தா
லெப்பாலு மெக்காலு மிளவெயிலும்
வாணிலவு மெறிப்ப தாமே. (௩௩)

2069 நிரம்பாமென் குதலைமொழித் திதலைமுலைத்
துடியிடையார் நேய நீத்த
வரம்பாரிப் பவர்திருமாற் குருகுளம்போ
னெக்கதொளி யுலவா மள்ளர்
மரம்பாயுந் தொறும்வரம்பிற் செதும்புடனே
யொதுங்குபுரி வளையு முத்துங்
குரம்பாக நிரந்தரநீர் நிலைக்கிருபா
லினும்வளர்க்குங் கொள்கைத் தாமே. (௬௪)

2070 தத்துவார் திரைப்புனன்மொண் டெழுபருவப்
புயல்பெயனுண் டளியி னீட்ட
மொத்துவார் புனற்செறுவுட் குறுமுளைவித்
தினைத்தலைக்கொண் டொருகை வீசி
வித்துவார் திரளனந்த மவரினும்வெள்
வளைகறங்க வெறிவண் டார்பூங்
கொத்துவார் குழல்சரிய முடிநடுவார்
திரளனந்த கோடி கோடி. (௬௫)

வேறு.

2071 வடுவகிரனைய கண்ணார் வளமுடி வகுந்து செய்யுள்
நடுபொழு திளைய செஞ்சே னனமும் புழுகு மள்ளப்
படுமுலைக்குவட்டிற்பாய்ந்துபதிந்துமேற்பார்த்தகண்ணிற்
கிடுகுறி யுவமை பார்ப்பா னேற்றமீக் கொண்ட தேய்க்கும்.

2072 சிறியசே வினங்கண் மற்றோர் சிறையினு மிரியச் செய்ய
நறியதார் மள்ளர் யாரு நாடிவல் விரைந்திட் டங்கைக்
குறியவாங்கயல்கட்கிந்தக்கொழுங்கயல்பொருவுமெய்ம்மை
யறிதுநா மெனக்கைக் கொண்டங் கறிந்தறலிரிக்கு மன்றே.

2073 செய்ம்முழுதினுஞ்சீர்மள்ளர்திரைத்தநாற்றினைச்செய்தோறு
முய்ம்முகத் திளைய மாத ருறுகுறை நிரப்பக் கொண்ட
கைம்முடி யவிழா நிற்பக் கான்முடி யவிழ்ப்ப மெல்லக்
கொய்ம்முகை யவிழ்செங் தேனைக் குழமிவண் டருந்து மாதோ. ()

வேறு.

2074 அகசரோ ருகத்திறைவன் றிறத்தினையே
யிறைபிரியா தவனு மேன்மை
மகசரோ ருகன்பயந்த வரத்தினர்தந்
நிறையழிக்கு மடந்தை மார்தம்
முகசரோ ருகத்தினைத்தேன் முகசரோ
ருகமெனவே முற்ற நாடி
நகசரோ ருகத்தினிற்பைங் களையெனத்தொட்
டுறிலராய் காணு மோர்பால். (௩௯)

2075 முகவட்டத் துபயவிழி களைகளையப்
புகுதலுநீர் முகத்துட் டோன்றச்
செகவட்டத் தொருகமலத் திருகுவளை
செறிந்ததெனச் சிந்தித் தேசெய்
யகவட்டத் தயற்கடைசி யுடன்களையப்
பரிசமுறு ததணு ணுண
மிகவட்டப் புணர்முலையார் பிறாறியாக்
குறுநகையே விளைப்ப ரோர்பால். (௪௦)

2076 கட்காவி களைபவர்தங் கட்காவி
தன்னையுங்கட் காவியென்றே
மட்காவிம் முறுமனத்திற் பெடையோடுங்
களிவண்டு வளைவ தோர்பால்
உட்காவிற் புணர்ந்துபுலந் திகந்தபெடை
யினைநேட லுறுசூட் டன்னப்
புட்காவிற் புறக்கழனி வெள்ளணிமங்
கையர்த்தொடர்ந்து போவ தோர்பால். (௪௧)

2077 *பூந்தேறல் வழிந்திழிந்து பொதும்பரினெண்
புளினமுறப் புரிவெண் சங்கந்
தீந்தேறல் வழிதவழ்ந்து தழனியுடன்
கழனிபுகத் தினிதோண் மள்ளர்

தாங்கேற லுகக்கலோகட் டெறிதவள
மரைமுகையைச் சார்ந்து சார்ந்து
மேய்ங்கேற வரிவளையைக் கொழுநனையென்
றளி[1]புலம்பி வீழு மோர்பால். (சஉ)

2078 சேதநாண் மலர்க்கலோகட் டெறிபவர்கை
வளையரவந் திரைநீர் வாவித்
தாதுலா மரைபெயரத் தவழ்ந்துழுசூல்
வளையரவந் தன்னி னீடு
மோதநீர் முழக்கெனக்காய்க் கதிர்ச்செந்நெ
லுரற்புடைபெய் துலக்கை யோச்சி
மாதரார் மனைக்கிழவர் வளம்பாடு
மழையரவ மலிந்த தோர்பால். (சஙு)

2079 பெரும்பெயலு நட்டமும்விட் டிலுங்கிளியு
நால்வாயும் பெயர்வெங் காலும்
பொரும்படைமன் னருமுதலா மிடரறியா
துடன்விளைந்த பொலிநெற் குன்றாற்
கரும்புடன்வால் வளையுயிர்த்த நித்திலக்குன்
றுன்மலிந்த காட்சி நாடிற்
சுரும்புளர்நாண் மலர்த்தடஞ்சூழ் புனன்மருதங்
குறிஞ்சியெனத் துளங்கு மாதோ. (சச)

2080 கடவுளர்தம் பூசனைக்கு மந்தணர்க்குங்
குரவருக்குங் கவிக ளாய
திடனுடைநன் புலவருக்குஞ் சென்றுபுரந்
திருந்துளவக் குன்றின் சேட
மிடனறிந்து பருவநினைந் திரப்பவர்க்குப்
புரந்திறமுன் னெய்து மில்லின்
மடவரலா ளொடுமிருந்தில் லறம்வளர்ப்பா
னெதிர்வருவ வளங்கண் மன்னோ. (சரு)

---

[பி-ம்.] [1] புலம்பி. மா.

2081 மனவலியா லுழவுதொழிற் கமைந்தனயா
வையுமியற்று மடியின் மள்ளர்
கனவரைபோற் றொடுத்துள[1]போ ருறுகளமல்
லாதுவறுங் களமு மில்லை
யனவரதம் புறவயிரக் கரும்புகறிக்
காட்டலுறு வாலை யில்லைத்
தினமவர்தங் கடிமனையுட் புதியதுணுப்
பொழுதெனப்போந் தினமு மின்றே. (சசு)

2082 இரங்குகோ கிலமுழவாய் மணிவிளக்காய்க்
கவிழ்ந்ததழை யெழினி யாய்மீச்
சுரந்தபூந் துணர்வனைகம் பலமெனமங்
கலகீதஞ் சுரும்பு பாடப்
பரந்தவோ திமத்திரள்வெள் ளணிமழவர்
மகளிரெனும் பால வாய்மண்
புரந்தகா வலர்திருவின் கடிமணப்பந்
தரைப்பொருவும் பொழில்கண் மன்னே. (சஎ)

வேறு.

2083 வளங்கொள் பொங்கர்வண் டழைமழை மாந்தளிர் வெயில்வண்
டுளங்கொள் புன்னைமென் றுணர்சுரும் பிழையிரு ளுதயம்
விளங்கு தாரகைக் கணமும்வெண் மதியுமாம் வியப்பிற்
றுளங்கு வான்குடி புகுந்தபோற் றோன்றுவ சோலை. (சஅ)

2084 அன்ன மேங்குகம் பலைகருங் குயில்கள்கூ வமலை
வன்ன மாமயிற் கணமக வரவத்தின் வளாய
துன்னு புன்னைமென் றுணருள ரளியபுட் டொழுதி
முன்னி மாமுகிற் கணமும்வே லையுமென முழங்கும். (சகூ)

2085 காசு லாமுலை மங்கையர் நாகிளங் கமுகிற்
றேசு லாமணி வடங்களைத் திண்ணிதிற் செறித்தே
வாச வான்சுருள் வண்டொடு மழவர்தம் மனமும்
ஊச லாடிட வூசலா டுவர்தின மோர்சார். (ரு0)

---

[பி-ம்.] [1] போர் வுறு. சு.